# பலி ஆடு

வடலி



நாங்கள் எதற்கு
சாட்சிகளாக்கப்
பட்டிருக்கிறோம்
அல்லது
எதற்காக
சாட்சிகளாயிருக்கிறோம்..
எனக்கெதுவும்
புரியவில்லை.
பகலையும் இரவையும்
கண்டு
அஞ்சும் என்
கண்களை
என்ன செய்வேன்..

கருணாகரன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பலியாடு

கருணாகரன்

வடலி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பலியாடு
கருணாகரன்
(உரிமை ஆசிரியருக்கு)
முதல் பதிப்பு ஏப்ரல் 2009
பக்கம்: 116
விலை: 100.00

PALIAADU
KARUNAKARAN©
First Edition – April 2009
Pages 116
Price Rs. 100.00

ISBN: 978-81-908405-2-1
விருபா சுட்டி: **http://www.viruba.com/final.aspx?id=VB0003132**

மேல் அட்டை வடிவமைப்பு : சயந்தன்
நூல் வடிவமைப்பு: த.அகிலன்.
இந்திய விற்பனை உரிமை: புலம்

வடலி

வடலி வெளியீடு
எண் . 6/13 சுந்தரர் தெரு,
எம் ஜி ஆர் நகர்,
சென்னை 600 078,
தமிழ்நாடு.
தொலை பேசி
0091 44 4354 0358
மின்னஞ்சல்
sales@vadaly.com

Published by Vadali
No. 6/13 Sunderer Street,
MGR Nagar,
Chennai 600 078,
Tamil Nadu
Phone
0091 44 43540358
Email
sales@vadaly.com

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

•••

யாருந் திரும்பவில்லை
நினைவுகளைப் புதைக்கமுடியாச் சகதியில்
கிழிபட்டுக் கிடந்ததென் பறவை.
பிரிவு சொல்ல யாருமில்லை
வரவு சொல்லவும் யாருமில்லை
கண்ணெதிரே ஒளியைத் திருடிப் போகிறான் பகற்கள்வன்
சகதியில் சிக்கிய பிணமாகக் கிடக்கிறேன்.
இருள்
பயங்கர வனாந்திரமாக திரண்டு வருகிறது.
யாரிடம் முறையிடுவேன்?

அன்னா அக்மதோவா
என்னரும் சோதரி
துயரம் உன்னுடன் முடியவில்லை
இதோ என்னுடைய காலடியிலும்
பாம்புகள் சூழ்கின்றன
கொட்டும் பனியில்
இரும்புக் கதவுகளுக்கு வெளியில் நீ நின்றாய்

உள், வெளி என்றெல்லாப் பிராந்தியத்திலும்
வெக்கை தகிக்க
நானோ
உள்ளுமில்லை வெளியுமில்லை

கதவிடுக்கில்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பொருளடக்கம்

0. ஒரு வாழ்த்துப் பாடல் (முன்)
1. சுற்றி வளைக்கப்பட்ட கிராமத்தின் பதுங்குகுழி
2. பலியாட்டின் கண்கள்
3. பூனையின் நிழல்
4. காணாமற்போனவனின் புன்னகை
5. சாட்சிகளின் தண்டனை
6. புதைசேறு
7. அந்திம நாய்க்குட்டி
8. வளாகத்தின் சுவர்களில் படிந்திருக்கும் பயங்கரம்
9. தகிக்கும் கூடு
10. காத்திருப்பின் நிழல்
11. பரிசு
12. அகதி மடி
13. காட்டிடம் திரும்புதல் குறித்து
14. முள்
15. சொற்களின் அகராதியும் புதைகுழியும்
16. கண்ணழிந்த நிலத்தில்
17. இசை மொழி
18. கனவுகளும் பொய்யும்
19. திரும்ப முடியாத திசை
20. எதிர்முகம் நேர்முகம்
21. திணை மனம்
22. சொற்களின் சந்தை
23. நான் தருவதெல்லாம்
24. புதிய எழுத்து
25. வெறுப்புமிழ்ந்த கல்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

26. குழந்தைகளின் சிநேகிதன்
27. உறக்கத்தில் வந்த மழை
28. இரண்டு குன்றுகள் ஒரு பள்ளத்தாக்கு
29. பறக்கும் மலைகள்
30. பூமியின் வாசனை
31. மாமிசம்
32. பெண்நிழல்
33. அம்மா
34. மிருகம்
35. சிரிக்கும் பறவை
36. கறுப்பு நாய்
37. மூடிய ஜன்னல்
38. குழந்தையின் குரல்
39. கரைய முடியா நினைவுகள்
40. தூக்கத்தைத் தொலைத்த கிழவன்
41. தெற்குத் தெரு
42. வடக்குப்படை வீடு
43. இனி
44. நிழலை விலக்க முடியாத போர் வீரன்
45. மிச்சம்
46. உதிரம்
47. குற்றமும் தண்டனையும் மன்னிப்பும்
48. தேவதேவனின் பறவை
49. யாரோ
50. இருள்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# திரத்தப்படும் சனங்களின் சிறு குரல்

2002 போர்நிறுத்தத்தின் பிறகு, யுத்த அனர்த்தங்களிலிருந்து, மெல்ல மெல்ல சனங்களின் நம்பிக்கையுடன் எழுந்த வீடுகளை யுத்தம் மீண்டும் நிர்மூலமாக்கி விட்டது. அது சனங்களை கருணையற்றுத் துரத்துகிறது. இழப்புகளின் பின்னான பிறழ்வுகளும் ஆயுதங்களின் கீழான முகாம்களுமே அவர்களுக்கான எதிர்காலமாக தரப்பட்டிருக்கிறது.

மனித அழிவுகளின் முன் மறுபடி மறுபடி சரிபார்க்க வேண்டியிருக்கிறது யுத்தத்தின் நியாயங்களை. யுத்தத்துக்கான நியாயங்களை.

இலங்கையுள் நடக்கிற உள்நாட்டு யுத்தம் இதுவரை காவுகொண்ட மக்களது எண்ணிக்கை எழுபது ஆயிரம் பேர் என சர்வதேச செய்தி நிறுவனங்கள் எழுதி வருகின்றன. மீள ஆரம்பிக்கப்பட்ட இந்த யுத்தத்தில் மாத்திரம், இதுவரையில் இரண்டாயிரத்துக்கு மேற்பட்ட மக்கள் கொல்லப்பட்டு விட்டார்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இன்னும் ஐயாயிரத்துக்கு மேற்பட்டவர்கள் காயப்பட்டும், உளவதைகளுக்கு உள்ளாகியும், தமது நண்பர்கள், உறவுகளின் கொலையுண்ட உடல்களை கடந்து அவற்றை கைவிட்டு இடைத்தங்கல் முகாம்களுக்கு வந்தவாறு இருக்கிறார்கள்.

அவர்கள் கடந்த தூரத்தை விட கொடியது கடக்கப் போகிற நினைவுகளின் தூரமும், தொடர் உடல், உளவதைகளும். ஆனால், காயப்பட்ட, கொலையுண்ட மக்களின் தொகைகளை கூட்டியும் குறைத்தும் சொல்லும் அதிகார வர்க்கமும், எண்ணிக்கைகளை கிரிக்கட் ஸ்கோர் போல பார்த்துப் பழகியவர்களும், பாதிக்கப்பட்ட இந்த மனிதர்களின் துயரங்களுக்கு வெளியிலேயே நின்று கொண்டிருக்கிறார்கள்.

உண்மையில், இழப்புகளின் இந்தப் பட்டியல் தோராயமான ஒரு தொகையே தவிர, பத்திரிகை மற்றும் சர்வதேச மனிதஉரிமை நிறுவனங்கள் உள்நுழையாத பகுதியில் மனித உயிரழப்புகள் அதிகமாக இருப்பதற்கான வாய்ப்புகளே நிறைய உள்ளன.

பத்திரிகையாளர்கள், செயற்பாட்டாளர்கள், மனிதஉரிமைவாதிகள் என மூன்றாம் நபர்களின் இடையீட்டை (உண்மையை) மறுத்த அரசாங்கம், அதே நிலமையை முகாம்களிலும் வைத்திருக்க விரும்புகிறது. சகல வகைகளிலும் மக்களை தனிமைப் படுத்துவதூடாக அவர்களது பாதுகாப்பை கேள்விக்குரியதாக்குகிறது.

அரசினது பாதுகாப்பு வலயத்தினுள் (safe Zone) சிக்குப்பட்டுள்ள 200,000இற்கு மேற்பட்ட மக்களின் அநாதரவான நிலை ஒருபுறம். மறு புறத்தில், மனித அழிவை விமர்சிக்கிறவர்கள், செயற்பாட்டாளர்கள், பத்திரிகையாளர்கள் கொலைசெய்யப்பட்டும், கைதுசெய்யப்பட்டும், தடுத்து வைக்கப்பட்டும், சித்திரவதைகளுக்கு உள்ளாகி வருகிறார்கள். இவற்றின் முன் அதிகாரம் கேட்பது சனங்களுக்கு நடக்கின்ற அநீதிகள் குறித்த மௌனத்தைத் தான்.

மக்கள் மீண்டும் மீண்டும் கைவிடப்பட்டவர்களாய் தெருக்களில் அலையுண்டவாறு பலமற்றவர்களாய் ஆக நிர்ப்பந்திக்கப்பட்டுள்ளார்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சர்வதேச அளவில் பக்கசார்பற்றதாய் நம்பப்படும் நிறுவனங்களும் மக்களின் அவலத்தை வெளியிலிருந்து பதிவு செய்துகொண்டுதான் உள்ளன.

ஆனால், றுவாண்டாவில் இருவேறு கறுப்பின மக்களுள், ஒரு பகுதி இனப்படுகொலைகள் நடந்த போதில், எவ்வாறு வெள்ளை உதவி நிறுவனங்கள், மற்றும் அதன் வேலையாட்கள் வெளியேறுமாறு கேட்கப்பட்டதோ அது போல வெளிநாட்டு உதவி நிறுவனங்களது 'மதிப்பு வாய்ந்த உயிர்கள்' வன்னி நிலத்தை விட்டு வெளியேறின. அதன் பிறகு, இந்த யுத்தம் 'மதிப்பற்ற மக்களின் உயிர்கள்' மேலே தொடர்கிறது.

இன்னமும் பேசப்படுகிற இரண்டாம் மகா யுத்தத்தின் யூதப் படுகொலைகளைப் போல எந்தக் கறுப்புப் படுகொலைகளும் சர்வதேச அரங்கில் முக்கியப்பட்டதில்லை. இன்றைய உலகின் முக்கிய பிரச்சினைகளாக முன்னிருக்கின்றவைக்கு அப்பால், 25 வருடங்களுக்கு மேலாய், மின்சார வசதிகள் கூட அற்று, பின்தங்கியிருக்கும் வன்னியின் குக்கிராமங்களது மக்களது துயரத்தை, அதன் பிள்ளைகளின் அழிவை எங்கே எழுதுவது?

இன்றைய நாளில், எறிகணைகளால் மாத்திரமல்ல அவர்களிடம் மரணம் வருகிறது. விவசாயத்தால் வாழ்ந்த அந்த மக்களே இன்று கொலைநிலத்தில் உணவற்று மடிகிறவர்களாயும், பரவக்கூடிய நோய்களுக்கான பலிகளாகவும், இழந்த உறவுகளுக்கான இறுதி சடங்குகளை செய்யவியலாதவர்களாகவும், மனச்சிதைவுற்றவர்களாகவும் ஆக்கப்பட்டுள்ளனர்.

போரில் காயப்பட்டவர்களால் நிரம்பி வழிகின்றன நாட்டின் ஏனைய பகுதிகளின் மருத்துவமனைகள். இடைத்தங்கல் முகாம்கள் அச்சம்தரும்வகையில் தனிமைப்படுத்தப்பட்டுள்ளன. தலைநகர் மற்றும், கிழக்கிலங்கையில் தொடரும் கைதுகள், பாலியல் வதைகள்..... இவற்றூடாக "ஒரு சுபீட்சமான எதிர்காலத்தைக்" கட்டியெழுப்புவதற்கான கனவும் நம்பிக்கையும் அதிகார சக்திகளிடமே இருக்க முடியும் மக்களிடம் அல்ல.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யுத்த நிறுத்தங்கள் எனுகிற பேரில் - வாழுவதற்குத் தரப்பட்ட அவகாசத்தில் - துளிர்விடும் மனித உயிர்ப்பிற்கான நம்பிக்கைகளை அழிக்கும் யுத்தத்தை நோக்கி, எதிர்காலங் குறித்த எவ்வித வாக்குறுதிகளையும் நம்பாது, கருணாகரனுடன் இணைந்து கேட்க வேண்டியிருக்கிறது "எங்கே கொண்டே விடும் இந்த யுத்த வெறி?"

கருணாகரனைப் பற்றிக் கூறுவதானால், தமிழில் புதிய போக்குகளைக் காண்பிப்பதிலும் மீறல்களை நிகழ்த்துவதிலும், புதிய இலக்கிய வடிவங்களைக் கண்டடைவதிலும் தொடர்ச்சியாக ஈடுபட்டு வருபவர். ஏனைய படைப்பாளிகளிற்கு ஊக்கமும் ஆதரவும் அளித்து நிற்பவர். இலக்கிய சந்திப்புகள் மாநாடுகள் என தொடர்ந்து செய்து கொண்டே இருப்பவர். வன்னியின் அடையாளப் படுத்தக் கூடிய கவிஞர்களில் ஒருவரான கருணாகரனின் மூன்றாவது கவிதைத் தொகுப்பு இது.

அரசியற் தீர்க்கதரிசனங்கள், இராணுவ வெற்றிகளுக்கு அப்பால், போரினுள் அன்பையும் கருணையும் வேண்டும் மனித இதயத்தின் குரலாக, திரத்தப்படும் சனங்களின் அவலத்தின் சிறு ஒலிப்பாக, இவரது கவிதைகள் உள்ளன. வன்னியிலுள்ள நண்பர்களுடனான தொடர்புகளை யுத்தம் முற்றாக அழிக்கும் முன் கிடைக்கப் பெற்ற அவரது கவிதைகளது தொகுப்பு, அவருடன் தொடர்புகள் ஏதும் அற்ற இந்த யுத்த காலத்தினில் வெளிவருகிறது.

**வடலி**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சுற்றி வளைக்கப்பட்ட கிராமத்தின் பதுங்குகுழி

வானத்தை நான் பார்க்கவில்லை
நட்சத்திரங்களையும் காணவில்லை
பதுங்குகுழியின்
இருளுக்குள் வீழ்ந்த வாழ்வின்
சருகு நான்
சூரியன் வந்ததா சென்றதா
நானறியேன்
நிலவின் ஒளியும் மறந்து போயிற்று

நிலம் அதிர்கிறது
குருதியின் மணத்தையும்
மரணத்தின் அருகாமையையும் உணர்கிறேன்
கந்தக நெடில்
கபாலத்தைப் பிளக்கிறது
வீரர்கள் முழங்கிக் கொண்டேயிருக்கிறார்கள்
அழியும் வாழ்வின் பிரகடனத்தை
ஒவ்வொரு துப்பாக்கியிலும்
ஒவ்வொரு பீரங்கியிலும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பூக்கள் இனி எப்படியிருக்கும்
மரங்கள் மிஞ்சியிருக்குமா
பறவைகளின் சிறகுகளில்
சாவு வந்து குந்திக் கொண்டிருக்கும்
காலம் இதுவல்லவா

இந்தப் பதுங்கு குழிக்கு
நம் எதிர்காலத்தைக் காப்பாற்றும்
கருணையும் வலிமையுமிருக்கிறதா
அல்லது
எதிரியிடம் பலியிடும்
ஒற்றனைப்போல்க் காத்திருக்கிறதா


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எனது பலியாட்டைக் கொண்டு வந்திருக்கிறேன்
ஒரு பரிசு
உயிரும் குருதியுமாகியது
அதில்
கவலைக்கோ வெட்கத்திற்கோ
இடமில்லை என்றார்கள்
என்றபோதும்
நம் நிழலைக் காணுகையில்
அச்சமாயிருக்கிறது

நான் கண்டேன்
உனது நிழலிலிருந்து குருதி பீறிடுவதை
எனது நிழலிலிருந்து
நெருப்பு சுவாலை விடுவதை

ஒரு வாழையிலையில்
நமது முகங்கள் படைக்கப்பட்டிருந்தன
நமது விருந்திற்காகவே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எனது புன்னகையை நீ தின்றாய்
உனது சிரிப்பொலியை நான் குடித்தேன்

பலியாட்டின் மணியொலி
விருந்தை முடித்து வைத்தது

நீ விடைபெற்றபோது
விடுவித்த கையில் பார்த்தாயா
காய்ந்த குருதியின்
அச்சமூட்டும் அழகிய கண்களை

பலியாடு அந்தக் கண்களிலிருந்து
நழுவிப் போய்க் கொண்டிருந்ததை
நாம் கவனிக்கவில்லை என்பது
இப்போது ஞாபகமிருக்கிறது


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பூனையின் நிழல்

நான் நினைக்கவில்லை ஒருபோதும்
ஒரு பூனை
இத்தனை கவர்ச்சியொன தென்றும்
இவ்வளவு பயங்கரமானதென்றும்

என் படுக்கையில்
அதன் உறக்கம்
பன்னெடுங்கால அமைதியின்
ஊற்றைப் பிரவாகித்தபடி

திகிலூட்டும்படி
பூனையின் உறக்கத்தைக்
காவல் காத்தவாறு
ஒரு போர்ப்படையாக
அதன் நகங்கள்
வேட்டையின் ருஷியையும்
வெற்றியின் நம்பிக்கையையும்
உறுதிப்படுத்தியபடி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பூனையின் குரலுக்கும்
அதன் கண்களுக்கும்
அதன் நடைக்கும்
அதன் உறக்கத்துக்கும்
ஏதேனும் சம்மந்தமிருக்கிறதா

கவர;ச்சியாயும்
மிகப் பயங்கரமாயும்
பூனை சுழன்று கொண்டிருக்கும்
நிழலில்
பூனையின் குரல்
வன்மத்துக்கும் சினேகத்துக்குமாக
ஒலிக்கிறது

அதன்
ஊடுருவும் கண்களில்
இன்னும் தீராதிருக்கிறது
பசி


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# காணாமற்போனவனின் புன்னகை

ஒரு பருவத்தின் நிழலிற் கண்டேன்
காணாமற் போனவனின் புன்னகையை

கடந்து போக முடியாதபடி
கொதித்துக் கொண்டிருந்தது
அப் புன்னகை

அதில் காயாமலே இருந்தன
இரண்டு கண்ணீர்த் துளிகளும்
அவனுடைய குருதியும்

திரும்பிச் செல்லவும் முடியவில்லை
காணாமற் போனவனின் புன்னகையை விட்டு

அங்கிருக்கவும் முடியாது
இன்னும்
காயமறுக்கும்
கண்ணீர்த் துளிகளின் முன்னாலும்
குருதியின் அருகாமையிலும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சாட்சிகளின் தண்டனை

ஒரு வரிசையில் நீ
இன்னொரு வரிசையில் நான்
சனங்களின் கண்களை எடுத்துக் கொண்டு
அவர்கள் போய்க் கொண்டிருக்கிறார்கள்

நாங்கள் எதற்குச் சாட்சிகளாக்கப் பட்டிருக்கிறோம்
அல்லது
எதற்காக சாட்சிகளாயிருக்கிறோம்
எனக்கெதுவும் புரியவில்லை
பகலையும் இரவையும் கண்டு
அஞ்சும் என் கண்களை என்ன செய்வேன்?

சனங்கள் புலன்களை இழந்து
நூற்றாண்டுகளாயிற்று
பரிசளிக்கப்பட்ட மரணத்தோடு
அவர்கள் தெரு நீளம் அலைகிறார்கள்

எந்தப் பெருமையுமில்லை
பொங்கியோடும் கண்ணீரின் முன்னால்
மரணத்தின் முன்னே
மண்டியிட்டழும் நாட்களைப் பெறுவதில்
எந்தச் சிறுமையுமில்லை
'மரணத்திலும் எளியது
கசப்பின் துளிகள் நிரம்பியதெனினும்
ஒரு பொழுதேனும் வாழ்தல் மேலானது'
என்றெவ்விதம் உரைப்பேன்?



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பெரும் பொறியில்
ஒவ்வொருவராய் வீழ்த்தப்படுகிறார்கள்
வெல்ல முடியாத காலம் நீண்டு செல்கிறது
குழந்தைகளின் காலடியிற் கூட.

புகை ஏந்திக் கறுத்த வானத்தில்
ஒரு துளி ஈரமில்லை
துளிர மறுத்த மரங்களில்
பறவைகளின் குரல் தங்கவில்லை

போ
கோடை தீயும் தெரு வழியே போ
காய்ந்து கருகிய கனவுகளின் மீது
நடந்து போ
'எந்தத் தாகமும் உன்னிடமில்லை
என்பது வருத்தமில்லை உனக்கு'
என்று யாரோ சொல்லிக் கேட்கிறது

போர் அறுத்தெறிந்த வாழ்க்கை
குருதி சிந்தக் கிடக்கிறது நடுத் தெருவில்
நாய் முகர

யாரும் உரிமை கோராத
இந்த இரத்தத் துளியை என்ன செய்வது
அதில் மிதக்கும் கண்களையும்
ஒலிக்கும் குரல்களையும்
என்ன செய்வது?



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## புதைசேறு

நாடு கடக்க முடியவில்லை
சுற்றி வரக்கடல்
சிறைப்பிடிக்கப்பட்ட தீவில்
அலைகளின் நடுவே
துறை முகத்தில்
நீண்டிருக்கும் பீரங்கிக்கு
படகுகள் இலக்கு.

மிஞ்சிய பாதைகளில்
காவலர் வேடத்தில் கொலையாளிகள்
குற்றமும் தண்டனையும் விதிக்கப்பட்ட
கைதியானேன்.

எந்த வரைபடங்களில் சிக்கியது
என் வழி?

...

...


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எனது மொழி என்னைக் கொல்கிறது
மொழியொரு தூக்கு மரம்
என்றறிந்தபோது
எனது தண்டனையும் ஆரம்பமாயிற்று
எனது குரல்
என்னை அந்தர வெளியில் நிறுத்துகிறது
விரோதியாக்கி.

அலையடிக்கும் கடலின் மேல்
நீண்டிருக்கும்
பீரங்கிக்கு
இதோ இரை.

அல்லது
பெயர்க்க முடியா நிழலின் அடியில்
புதை சேற்றில்
பிணைக்கப்பட்ட
அகதி முகம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அந்திம நாய்க்குட்டி

முடிவுறாத அந்திமத்தினுள்
இவ் மலர்களை சாத்துகிறேன்
தொலைவில் கரைகிறது சூரியன்.
காலடியில் காயாதிருக்கும்
நிழலை
மறைய முடியாமல் தத்தளிக்கும்
அதன்
மெல்லிய குரலை
இந்த வெளியில்
தனியே
எவ்விதம் விட்டுச் செல்வேன்?

தெருவில் எறியப்பட்டிருந்த பொம்மையைக் கண்ட
நாய்க்குட்டியின் நினைவுகள்
அதைத் தூக்கியெறிந்தன
முடிவுறாத அந்திமத்தினுள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அங்கே
பொம்மையைப் பிரிந்து
இரவைப் பிரிந்து
தாயைப் பிரிந்து
வீட்டைப் பிரிந்து
போர் மரத்தில் அறையப்பட்ட
பொம்மையின் சிநேகிதன்
உடல் கிடந்தது.
அதன் காயங்களில்
நம் அறிவீனத்தின் கண்கள்
நமது போர்ப்பிரியத்தின் சின்னங்கள்
ஆறாதிருந்தன.

அந்த உடலில் பார்த்தது நாய்க்குட்டி
தன் விதியையும்.

பகலாகவும் இரவாகவும்
நெருங்கி வந்தது அந்திமம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வளாகத்தின் சுவர்களில் படிந்திருக்கும் பயங்கரம்

மழை இரவில் வளாகத்தின் சுவர்கள்
பயங்கரமாயின.
வழுவழுப்பான அந்தச் சுவர்களைத் துளைத்துக் கொண்டு
நேற்று வந்த மிருகங்கள் இன்றும் வரக்கூடும்
நேற்றிரவின் பலியை
இன்றும் அவை தொடரக்கூடும்.
எல்லாவற்றுக்கும் துவக்கை நம்பும்
காலத்தில்
இரவும் பகலும் மரணத்தின் நிழலில்
உறங்கிக் கொண்டிருந்தன.

பகலில் மருத்துவமனையிலிருந்து திரும்பியவனை
இரவு விழுங்குகிறது
இரவில் படுத்துறங்கியவனை
பகல் பலிகொண்டது
கொலை நகரத்தில் வாழ்வொரு
சல்லடையாக்கப்பட்ட பழைய கந்தற்துணி.

பயங்கரங்களின் இரவைக் கடந்து
காலையில்
தெருவில் இறங்கினேன்.
சிதறிக் கிடந்த பிணங்களைக் கடந்து
கடைக்கு வந்தபோது
இரத்தம் ஒழுகிக் கொண்டிருக்கும் பத்திரிகையை
வாங்கிச் செல்லும் சனங்கள்
மௌனமாய் விலகினார்கள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நடைபாதையில் தேங்கிக் கிடந்த சேற்றில்
இன்னும் சூடாறாமல் புகைந்து கொண்டிருந்த
துப்பாக்கியின் வெற்றுக்கோது சிரித்தது.

காய்கறிக் கடையில்
தேங்கிக் கிடந்த அழுகுரல்களை விலக்கி
தன் முகத்தைக் காட்டிக் கொண்டிருந்த பெண்ணிடம்
நாயிழுத்துச் சென்ற
கொலையுண்ட மனிதரின் வாடிய முகங்களிருந்தன.

பிள்ளைகளைத் தின்னக் கொடுத்த தன் துயரத்தை
வரும் ஒவ்வொருவரிடமும்
பகிர்ந்து கொண்டிருந்தாள் அவள்.

கொலைவாளை வைத்திருந்தான் என்று
குற்றஞ் சாட்டப்பட்ட பழக்கடைக்காரனின்
தலையைக் கொய்துகொண்டு போன
புதிய கடவுள்களைச் சனங்கள் திட்டினார்கள்.

சாத்தானும் கடவுளும்
ஒரே ராஜ்ஜியத்தில் பங்குவைத்துக் கொண்ட
உலகத்தில்
சனங்களின் நிழலைக் கண்டு
நெடுங்காலம் என்று சொல்லிச் செல்லும்
ஒருவனைக் கண்டேன்
அன்றிரவின் இறுதிக் கனவில்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தகிக்கும் கூடு

காயங்களிலிருந்து
வெளியேறிய பறவை
தன்னுடன் எடுத்துச் செல்கிறது
தன் அழகிய மலரை
தன்னுடைய பெருந்தீயை
தன் கடலை
தன் வெளியை.

அதனிடமில்லை
மீண்டும் கூடு திரும்பும்
நினைவின் நிழல்.

அது செல்லும் வழியில்
தன் சிறகுகளையும்
கொடுத்துச் சென்றது காற்றிடம்.

வலிகளைக் கடந்து போகும் பயணம்
வெறுமையை
நிரப்பிவிடுகிறது கூட்டினுள்.

பறவையின் ஆறாச் சூட்டில்
தவிக்கிறது கூடு, தனியே.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## காத்திருப்பின் நிழல்

உருகிச் சிதறும் நிமிடத்தின்
ஒவ்வொரு துளியும் சேமிக்கின்றன
நம் முகத்தின் பிரதிபலிப்புகளை.

பகிர்ந்து கொள்ள முடியா
முத்தத்தின் ஈரம்
வானவில்லாகி மிதக்கிறது
இந்த மாலையில்.

நீ பருக மறுத்த பானத்தை
முழுவதுமாக
நான் பருகுகிறேன்
கசப்போடும் தனிமையோடும்.

திரைகளின் பின்னான
பள்ளத்தாக்குகளில்
மாயப் பறவையின் வினோதம் நிகழ்கிறது.

இன்னும் காலியாகாத பானம்
மீதமிருக்கிறது
உன்னை நினைவூட்டியபடி.

எப்போதும் பேசாமல் சேமித்திருக்கும்
எனக்கான உன் சொற்களின் ரகசியத்தில்
திரண்ட மகரந்தத்தில்
அமர்ந்திருக்கிறதென் வண்ணத்துப்பூச்சி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மலையின் உச்சிச் சிகரத்தில்
மீதிப் பானத்தோடு
ஒற்றைச் சிறகில் நடனமிடுகிறது
ஞாபகங்களும் கனவும் நிரம்பிய
என் மனம்.

காத்திருப்பின் நிழல்
விதியாய் நீண்டு
கடலாகி
வானத்தில் சேர்ந்து
விரிகிறது
வானமாகி.

நட்சத்திரங்களின் ஈர்ப்பு விசைக்கப்பால்
சுழன்று கொண்டிருக்கும்
முடிவிலாப் புள்ளியின் காய்ந்த மலர்
இன்னும் வற்றாத ஞாபகங்களின் ரேகைகளோடு
படபடக்கிறது ரகசியங்களுக்காக.

இப்போது
காலியாகி விட்டது பானம்.

வானவில்லில் தெரியும்
அன்பறிந்த சொல்லை
மொழிபெயர்க்க முடியுமா உன்னால்?

ஆயின்
என் காய்ந்த மலரிலும்
நடனமிடும்
வாசனையையும் தேன் துளியையும்
அறி.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மணல்வெளிக் கோயிலில்
பாடுகளைச் சொல்லி
மன்றாடும் பெண்ணிடம்
வழிபாட்டின் ரகசியம் என்னவென்று
கடவுள் கேட்டார்.

அந்த அதிகாலையில்
கடவுளின் குரல்
அவளுடைய செவிகளை அண்ட விடாது
பெருகிய போரொலி
கடவுளைத் தொடர்ந்து பேச விடவில்லை
கடவுள் ஏதேதோ சொல்வதை
அவதானித்த அவள்
அவரை நெருங்கி
அருகிருந்து விவரம் கேட்க முனைகையில்
பார்த்தாள்
பதுங்கு குழிக்கருகில்
கடவுளின் அங்க வஸ்திரம் தனியே கிடந்தது.
அவளதை தீண்டிட முன்னே
அவளைச் சுற்றி
ஒரு பாம்பாக வளைந்த தது
பிறகு
மேலெழுந்து போனது
எங்கோ.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவள்
தேவாலயத்தின் சுவர்களில்
தன்னுடைய தலையை மோதி அழுதாள்
தனக்கும் கடவுளுக்கு மிடையிலான
பந்தத்ததை சாட்சியாக வைத்து.

பிறகு
மணல்வெளித் தேவாலயத்தில்
கடவுள்
நீண்ட நாட்களாக வர முடியாதிருந்தார்
அவளுடைய குரலும் வேதனையும்
அங்கிருக்கென்று.

தேவாலயத்தில் நிரம்பிய
அவளுடைய குரல்
மணல்வெளியில் சுவறிக் கொண்டிருக்கிறது.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வெளியற்ற வெளியில்
ஊற்றிய தீயில்
தலையசைக்க முடியாமற் திணறும் காற்று
ஒடுங்கியது
இந்தக் குடியிருப்பில்
புழுதித் தெருவில்
படுத்துறங்க முடியாமல் அலையும்
நாயின் மடியில்.

திண்ணையில்
விட்டுச் சென்ற வழிப்போக்கனின்
துயரம்
அச்சுறுத்திக் கொண்டிருக்கிறது
யாரையும் நெருங்க விடாமல்.
துடைத்தளிக்க முடியா
ஞாபகத்தோடு
தாத்தாவின் கைத்தடி
தனியே நடந்து சென்றது
வெளியம்பலக் கோவில் முற்றத்தில்
விளையாடும் குழந்தைகளிடம்.

ஒரு சொட்டு நீரில்லாத
அகதி முற்றம்
இவ்வெளி கடந்து
இத்திசை கடந்து
சடைக்கிறது ஜெயமோகனின்
டார்த்தீனியமாய்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆப்கான் மலைச்சரிவுகள்
பெரும் பள்ளமாகின
அகதிப்போக்கரின்
துயர் நிறை சுமை கூடி.

பார்த்தேன்
சிதறியோடும் குர்திஸியையும்
பற்றியெரியும் தீயில்
கருகும் ஈராக்கியையும்
தலையில் காஸாவைத் தூக்கியபடி
போகும் வழியும் நிற்குமிடமும்
தெரியாமற் தடுமாறும்
பலஸ்தீனியையும்
தெருவான என் முற்றத்தில்
துக்கமொழுக.

மட்டக்களப்பின் பெரு வாவிகளில்
நிறைந்தது பெரிய காக்காவின் கூக்குரல்
நிலவை ஊடுருவி
பெரிய தம்பிரான் பாடுகிறார்
தன் துயர் குத்தும் வலி
பொறுக்காமல் வெடித்த சொற் கொண்டு.

வன்னியிலும்
புத்தளத்திலும்
அனற்காற்றடித்து
ஊற்றிய தீயில்
வெளியான வெளியில்
படுத்துறங்க முடியா நாயின் மடியில்
ஆற்றவியலாப் புண்ணென
சாம்பல் பூத்துக்கிடக்குமென்
அகதி மடி.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## காட்டிடம் திரும்புதல் குறித்து

இந்தக் காட்டில்
இனியும் அலைய முடியாது
தன்னுடலில்
தீ கொண்டிருக்கிற தது.

வழி மறிக்கும் மரங்களிடம்
பேசுவதற்கில்லை
ஒரு சொல்லும்.

தன் வினோதங்களோடு
விரியும் காடு
இடம் மாற்றிக் கொண்டேயிருக்கிறது
மரங்களையும் காட்டாற்றையும்
பாதைகளையும்.

இருளடர்ந்த காடு
தன் மேல்
சுடரவிட்டது ஒளிரும் வானத்தை.

உள்ளே
காட்டின் மடியில்
காணாமற் போயிருந்தது
ஆறு, ஊற்றுக் கண்ணுடன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## முள்

இந்த நட்சத்திரங்களிடம்
எனக்கில்லை அவ்வளவு பிரியம்
ஒரு புத்தகம் தன்னும் வாசிக்க முடியவில்லை
அவற்றின் ஒளியில்.

உதிரும் பழைய வீட்டின்
காரைச் சுவர்களில்
கனவின் நிறங்கள் கலைந்து போவதைக் கண்டேன்
ரகசியங்கள் விம்மிக் கொண்டிருந்த
ஒரு நாளில்.

படகோட்டிகளை
காப்பாற்ற முடியாத இந்த நட்சத்திரங்களைத்
திட்டும் குரல்களில்
பதறுகிறது இரவு.
இருக்க முடியவில்லை யாராலும்
எந்த ரகசியங்களைக் கைவிட்டும்
எந்த ரகசியங்களோடும்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எண்ணித் தீராத நட்சத்திரங்களில்
எப்போதுமிருக்கிறது
நம்பிக்கையும் துரோகத்தனமும்
வானத்தை தின்கின்ற
வன்மமும்.

எல்லோராலும் கைவிடப்பட்ட
விருந்தாளிகள்
புறப்பட்டுப் போனார்கள்
எதுவும் சொல்வதற்கின்றி
ஓரிரவில்.

போர் தன் விதியைத் தானே எழுதிச் செல்ல
நீர் தழும்பிய கண்களில்
யார் விடுவது தூண்டிலை?



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சொற்களின் அகராதியும் புதைகுழியும்

*(1)*

புதியதொரு சொற்களின் அகராதியைக்
கண்டெடுத்தேன்
மழை கொட்டிக் கொண்டிருந்த
ஒரு காட்டுப்புறப் பாதையில்

புராதன காலத்திலிருந்து
அந்த அகராதி தகித்துக் கொண்டிருந்தது
சொற்களின் கனதியைத் தாங்க முடியாமல்

கறையான்கள் அஞ்சும் சொற்கள்
அகராதியை விட்டிறங்கி
எங்கோ போய்விட்டன இருளில் அமிழ்ந்து

புதிய சொற்கள் முளைத்தன
புல்வெளிப் பரப்பை விரித்து
சில சொற்கள் சிரித்தன ஒளி மிகக் கொண்டு
ஒரு சொல் வளர்ந்து மலையானது
உள்ளே கருணையூற்றுப் பெருக
இன்னொரு சொல்
கரைந்து நீரானது நதியின் வடிவில்
வேறொரு சொல்
கடலாகியது மீன்கள் துள்ளி நடனமாடிட
ஒரு சொல் மலர்ந்தது
நிறங்கள் பொங்கும் மலர்களாக



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தேனிசை வாசமாகி யொழுகும்படி
இன்னொரு சொல் சிறகுகள் முளைத்துப் பறந்து சென்றது
பிறதொரு சொல் தானியமாகியது
அத் தானியத்திலிருந்து
முளைத்தது இன்னொரு கோள்
பூமியின் சாயலோடு

விரிந்திருந்த அகராதியிலிருந்து
ஒவ்வொரு சொற்களும்
ஒவ்வொரு பொருளாகவும் பொருளற்றும்
இயக்கமடைந்து நகர்ந்தும் பறந்தும் பாய்ந்தும் மிதந்தும்
மறைந்தும் சென்றன அகராதியை விட்டு

விரிந்து கிடந்தது பாலை மணற் பெருக்கின் தகிப்பில்
அந்த அகராதி இப்போது.

*(2)*

நொதித்துத் ததும்பிக் கொண்டிருந்த
நிலத்தில்
வடிந்து கொண்டிருந்த ஊனத்தைப்
பின்தொடர்ந்த குழந்தையொன்று
கண்டது சொற்களின் புதைகுழியை.

இரத்தக் கறையும்
துருவும் படிந்திருந்த சொற்களில்
ஒட்டிக் கிடந்த காலத்தின் துகள்களில்
மின்னின கண்ணீர்த் துளிகள்.
மெல்ல அக் கண்ணீர்த் துளிகளை
தொட்ட குழந்தை அதிர்ந்தது
உடைந்தொழுகிய அவற்றின் குரலைக் கேட்டு.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நாறும் அச் சொற்களின் துருவை
விலக்கிய குழந்தையின் விரல்கள் காயம் பட்டன.
காலத்தின் துருவேறிய சொற்களில் இன்னும்
வன்மம் நிறைந்திருந்தது, உக்காமலே
எனினும் மெல்ல
அச் சொல்லை எடுத்து
அதன் அடையாளத்தைக் கண்டபோது
அதிகாரம்
துப்பாக்கி வடிவிலும்
கத்தியின் உருவிலும்
வதையின் ஈனக் குரலோடும்
சிறைக்கூட விலங்குகளின் கனத்தோடும்
இருந்தது.

இன்னொரு சொல்லை எடுத்த குழந்தையின் உடல்
நடுங்கியது
அதனுள்ளிருந்த மின்னலைகள் தாக்கி
போர் என்ற அந்தச் சொல்லில் ஏராளம் உயிர்களின்
முனகலொலி அதிர்ந்து கொண்டேயிருந்தது.
பிறகவை ஒவ்வொரு கண்ணாக
பெருகிக் கொண்டிருந்தன.

குழந்தை அச் சொல்லை உதறியெறிந்தது
ஆனால் அந்தச் சொல் குழந்தையுடன் ஒட்டிக் கொண்டது
அப்படியே அது
சுற்றி விரிந்து தன்னுள் இழுத்தது குழந்தையை


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குருதியொழுக தவழ்ந்து வந்த குழந்தை
இப்போது தன் கையில் அகப்பட்ட சொற்களை
விலக்கி
வெளியே வந்தது
என்றபோதும் புதைகுழியிலிருந்த சொற்களெல்லாம்
குழந்தையைப் பின் தொடர்ந்தன
வலையில் விரியும் படையின் அணிவகுப்பாய்.

இன்னும் குழந்தையைத் தோற்கடிக்கும்
அத்தனை சொற்களும்
ஒரு கண்ணியில் பொருந்திக் கிடந்தன
வெடிகுண்டுகளின் ரகசியங்களுடன்

குழந்தையைப் பின் தொடர்ந்த
அப் புதைகுழியின் நிழலில்
மறைந்திருந்தன
...சிறை, விலங்கு,
புலனாய்வு மற்றும் அரசியல்,
படை, மறுமலர்ச்சி,
சுதந்திரம், ஜனநாயம், விடுதலை, தேசியம்,
அன்பு, கருணை, பகை, கோபம், பரஸ்பரம் என
ஏராளம் எதிரர்த்தச் சொற்கள்.

'திறந்த புதைகுழியை யாராவது மூடுங்கள்'
என்ற குழந்தையின் கேவல் இன்னும் கேட்டுக்
கொண்டேயிருக்கிறது
எல்லோருடைய புலன்களையும் ஊடுருவிச் செல்லும்
நுண் துளைப் பெருக்கியினூடாக.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கண்ணழிந்த நிலத்தில்

கண்ணழிந்த நிலத்தில்
முளைகளின் ஒலியெழுந்தபோது
தாழ்ந்த மரக்கிளைகளிலிருந்து விழுந்தது
உறங்காச் சூரியன்
கூடுடைந்து.

எழுந்த முளைகளின் பேரலை
பரந்தது வெவ்வேறு
திணைகளில்.

உருக்குலையும் காலையில்
துருவேறிய மலர்களை
எடுத்துச் சென்றார் கடவுள்
பதற்றத்துடன் விரைந்து.

சந்தையிலிருந்து திரும்பிய
பெண்ணிடம்
தன்னை அறிமுகப்படுத்திய கடவுள்
கேட்டார் இரண்டு காசுகளைக் கடனாக.

பசி தணிந்த பிறகு காத்திருந்த
கடவுளை ஏற்றிச் செல்லவில்லை
எந்தப் பேருந்தும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யாரும் பேசாமற் சென்றபோது
தனித்த கடவுள்
'வாழ்ந்து விட்டுப் போங்கள்' என்றார்
சலிப்பு நிரம்பிய கோபத்தோடு.

துருவேறிய மலர்கள்
கல்லாய் இறுகி மலைப் பாதமாகின.
'அதுவே கடவுளின் பாதம்'
என்றாள் கடன் கொடுத்த பெண்.
கண்ணழிந்த நிலத்தில்
இப்போதிருந்தன
அந்தப் பெண்ணின் ஒரு சோடிக்கண்கள்
நெருப்புமிழ்ந்தபடி.

அதனுள்ளிருந்தது ஒரு பாற்குடம்
அவளிதயத்தின் வடிவில்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இசை மொழி

பாடுக என்ற இசை மொழியைச்
சொன்ன காற்றிடம்
பாடியது பறவை
தன் அந்தரங்கத்தின்
உள்ளூறிய சுனையை.

மரங்களை வாழ்த்தி
காற்றை வாழ்த்தி
வெளியை வாழ்த்தி
தன் சிறகை வாழ்த்தி.

பறவையின் அந்தரங்கச் சுனையை
அறிந்த காற்று
கொண்டு சென்றது
மரத்திடம்
வாழ்த்துகளை

வெளியிடம்
நன்றியை

சிறகிடம்
குதூகலத்தை

அந்தத் திருவிழாவில்
ஒரு விருந்தாளியும்
கலந்திருந்தார் தோழமை நிரம்ப

சே (குவேரா)
இன்னும் இளமையாகவே இருக்கிறீர்கள்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யாரும் யாருக்காகவும் இல்லை என்றபோது
இப் பூமியில் இல்லை
பாதாளமும்
கோபுரமும்

நான் தேடினேன்
பாற் கடலை
அவன் தேடினான்
விச மலையை
கலசங்கள் உடைந்து வீழ்கின்றன

இருக்கட்டும் வான் வெளியில் பறக்கும்
நமது கனவுகளும்
பொய்யும்

கண்ணீரில் பிரதிபலித்த
முகங்களை
கடக்க முடியாமல் திணறிய
ஒரு காலம்
பழி நிரம்பி உறைந்தது

வழியற்ற வெள்ளாடுகளை
வேட்டையாடுகிறது
காடு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நான் நெருப்பைத் தின்கிறேன்
பாழும் சேற்றில்
நாற்றமெடுக்கும்
புழுக்களோடென்னை
பழக வைக்கிறேன்

இசை ஒரு நொருங்கிய
பாத்திரமாக சிதறிக் கிடக்கிறது
காற்றில் பரவுகின்றன
நெருப்புத் துகள்கள்

நாயெங்கே பூனையெங்கே?
என் காலை இழுத்துக் கொண்டு போகின்றன
கரப்பான் பூச்சிகள்
பங்கருக்குள் இருள்
இருளுக்குள் இருக்கிறது பாம்பு
பங்கருக்கு மேலேயும் சுற்றுகிறது பாம்பு
சிறகோடு.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## திரும்ப முடியாத திசை

ஒரு நூலில் ஆடுகிறது
நாடகம்
கலக்கத்தின் முனை
இன்னும் கூர்மையடைகிறது

இரத்தத்தை ஊற்றி விட்டு
பாத்திரத்தைக் கழுவுகிறான் கடைக்காரன்
இலையான்கள் தூங்கப் போய்விட்டன
நான் முழித்திருக்கிறேன்
நினைவில் வருகிறாள் லோத்தின் மனைவி.
அழமுடியாமலிருக்கும் அக்மதோவா
யாரிடமும் பேசவில்லை.
ரஞ்சகுமாரின் கோசலை
விம்மலை இன்னும் நிறுத்தவில்லை.

திரும்ப முடியாத திசையில்
சென்றுவிட்டது படகு
மலையுச்சிக்கு வா
கல்லிலும் மரம் நிற்கும் அதிசயத்தை
சொல்லும் உன் கண்கள்.

கடலின் ஆழத்தில்
தேங்கி நிற்கிறது இரத்தத் துளிகளும் கண்ணீரும்
கரைய முடியாத துயரமும்
அவர்கள் திட்டிய
வசையும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சாம்பல் மேட்டில்
காத்திருக்கிறான்
புலவன்
இரவு
அவனிடம் விடை பெற மறுக்கிறது
காலையைச் சந்திக்க அதனிடம்
எந்த வலிமையும் இல்லை
இன்னும் வீசிக் கொண்டிருக்கிறது
பிணத்தின் வாடை.

எங்கே அந்தக் காகங்கள்
கடற்கரையில்
பாடமறுத்த தேவனை
அவர்கள் சிலுவையிலறைந்த போது
எழுந்த குரல்
அந்த மண்ணில் சுவறிவிட்டதாக
அவனுடைய குழந்தைகள் சொல்கிறார்கள்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தாகத்தின் ஒளியும் நிழலுமாய்
என்னிடம் வந்தாய் அன்று
நிழலுமில்லாத
வெயிலுமில்லாத
ஒரு பின்னேரம்
ஒழுங்கையில் நாம் சந்தித்தோம்

யாருக்கும் தெரியாமல்
நினைவுகளையும் ரகசியங்களையும்
எடுத்து வந்திருந்தாய்
என்னிடமிருக்கவில்லை
துக்கத்துக்கும் மகிழ்ச்சிக்கு மிடையிலான பாலம்
நம்பிக்கைக்கும்
நம்பிக்கையின்மைக்கு மிடையிலான
தொடுப்புகள்.

பூவரசம் மரங்கள் காற்றில் அசைந்தன
தூரத்தில்
பனைகளின் பின்னே
நம் உணர்வுகளைப் பிரதிபலிக்கிறது
மாலைச் சூரியன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நான் இன்னும் சிறுவனா
இல்லை
நீதான் இன்னும் சிறுமியாக இருக்கிறாயா
அல்லது
இருவருமே சின்னஞ்சிறுசுகளாகத் தானிருக்கிறோமா
காலம் எங்கே மறைந்தது.

காற்றுக் குதூகலித்து முத்தமிடுகிறது
பூவரச மரங்களை.
நீ தவிக்கிறாய்.
பனைகளின் பின்னே
வானத்தை நிறம் மாற்றுகிறது
சூரியன்

இந்த ஒழுங்கையில்
அந்த மாலையில்
இரண்டு குருவிகள் தீயில் எரிந்து கொண்டிருந்தன
மணலின் மேலே

தாகத்தின் ஒளியும் நிழலுமாய்
நீ வந்தாய்

ஒரு மைம்மற் பின்னேரம்
என் தலையைச் சீவியெறிந்தது
எனக்கான பரிசாக
எனக்கான தண்டனையாக


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குறிஞ்சி மலர் நெகிழ்ந்துருகி
காட்டிலோடி வயலில் பரந்து கடலில் கலந்தது
மலையின் வாசனையோடும்
அதன் கருணையோடும்.

காடு தன் மடியிலிருந்த
பறவையை அனுப்பியது
மலையுச்சிக்கு

பறவை செல்லும் வழியில் வயல்வெளி அழைத்தது
தானிய விருந்துக்கு
பிறகு
தன் ரகசியங்களைச் சொல்லி அனுப்பியது
பாலைக்கும் நெய்தலுக்கும்
குறிஞ்சிக்கும் முல்லைக்கும்
தூதாகவும் விருந்தாகவும்.

கடல் தன் வாசனையை அனுப்பியது
காற்றிடம்
காற்று எடுத்துச் சென்ற கடலின் வாசனை
மலையில் படர்ந்தது
வயல் வெளித் தானியங்களில் கலந்தது
பாலையின் மணற் புரத்தில் சுவறிக் கலந்தது
முல்லைப் பூக்களில் அது வாசமாகியது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாலையின் கொடுந் தகிப்பு
உறைய விடவில்லை
மலையையும் நதியையும் கடலையும்
காட்டின் இருளையும்.

வெள்ளாமைக் கொட்டிலிலிருந்து
கிளம்பிவரும் பாட்டொலி காற்றில் மிதக்கும்போது
அதைக் கொத்திக் கொண்டு போன பறவைகள்
கடலில் மீன்களுக்கு விருந்தளித்தன
பிறகு மணல்வெளியில் கலந்தன
மிஞ்சிய தானியங்களோடு
பறந்த பறவைகள் கடலின் காற்றோடு
மலையுச்சியில் அப் பாடலை இறக்கின
அதன் கனிந்த ஈரத்தோடு.

மலையுச்சியிலிருந்து திரும்பிய பறவை
தன் அலகுகளில் ஏந்தி வந்த
மலையின் கனவை
சிந்திச் சென்றது
கடலிலும்
மணல் வெளியிலும்
வயற் பரப்பிலும்
காட்டின் மடியிலும்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சொற்களின் சந்தை

பூமியெங்கும் நகர்ந்து கொண்டிருந்த சந்தையில்
ஏராளம் சொற்கள் குவிந்திருந்தன
ஊர்ந்தவாறும் பறந்தபடியும்
தொனிகள் கூடிப் பல்
வடிவில்.

எந்தச் சொற்கள் மலிவென்றும் விலையென்றும்
தெரியாமல்
தங்களுக்கான சொல்லெதுவெனத் தேரவுமியலாமல்
அங்குமிங்குமாக அலைந்து கொண்டிருந்தோரைப்
பார்த்தேன்
அவ்விரவிலும் பகலிலும்.

சொற்களை முகர்ந்து பார்த்த நாய்கள்
விலகிச் சென்றன அப்பால்
கண்ணொமுக.
பாம்புகள் சொற்களினூடே
மிக லாவகமாய் நெளிந்து சென்றன
நடனமொன்றின் லாவகத்தோடு.

விலகிச் சென்று
பொந்தினுள் நுழைந்த பாம்பைக் கண்டு
சீறிய சொல்லை
பாம்பினால் எதிர்கொள்ளவே முடியவில்லை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒளிரும் சொற்கள்
பஞ்சடைந்த புராதனச் சொற்கள்
கண்ணீர் நிரம்பிய சொற்கள்
கசப்பின் நெடியுடைய
வன்மத்தின் சதையுடைய சொற்கள்
வசைச் சொற்கள்
பளபளக்கும் சொற்கள்
மலையின் அடிவயிற்றுக் குளிரோடிருக்கும் சொற்கள்
அனற் கொதிப்போடிருக்கும் சொற்கள்
குழந்தைச் சொற்கள்
குன்றுமணிபோலச் சிதறிய சிறிய சொற்கள்
கூர்முனையொளிரும் சொற்கள்
நைந்த சொற்கள்
கருணையின் நதி பீறிடும் சொற்கள்
சிறகுடைய சொற்கள்
ஊரும் சொற்கள்
இறுகிய சொற்கள்
கரைந்தொழுகும் தளிர்ச் சொற்கள்
தெறித்துப் பறக்கும் சொற்கள்
பிளாஸ்ரிக்கின் நெகிழ்ச்சியோடு இழுபடும் சொற்கள்
கருகித் தீய்ந்த சொற்கள்
திரவிய வாசனையோடு மணக்கும்
பாதையாய் நீண்டு செல்லும் சொற்கள்...

சந்தையில் பெருகிக் கொண்டிருந்தது
சொற்களின் வெள்ளம்
வினோத நிறத்தோடும் வாசனையோடும்
ஒலித்துக் கொண்டும்
கண்ணைச் சிமிட்டி சிரித்தவாறும்.

சிவப்பு என்ற சொல்லில் குருதி பீறிடுமா
என்று கேட்டாள் அச்சத்தோடு ஒருத்தி
அவளின் மீது போரின் நினைவுக் குறி
தீரா வசையாய்ப் படிந்திருந்தது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பச்சை என்ற சொல்லில்
தன்னுடைய வயல் நிலத்தை மீட்டுவிடலாம்
என்று நம்பினார்
நகரத்தில் அநாதரவாக எறியப்பட்டிருந்த
புராதன விவசாயி
தன் நிலம் பறிபோன கொடுங்காலம் வதைக்க.

நீலம் என்ற சொல் வானமாகியது
கரைந்து
பறவை வாசனையோடு.

நதியென்ற சொல்
பெண்ணாகி நிலமெங்கும் விரிந்தது
உயிர்ச்சுனை நொதித்து மண் நெகிழ.

விதை என்ற சொல்லைக் கொத்திச் சென்ற பறவை
அதை ஒரு வயல் வெளியில் எறிந்தது
தானிய வாசனை கமழ
முளைத்தன பச்சைப்பசும் பயிர்கள்

மலை என்ற சொல்லினுள்ளிருந்து
நதி பெருகி
பாறையை நனைத்தது கசிய.

எனக்குத் தெரிவில்லை
ஒரு சொல்
எப்படிக் கரைந்து போகிறதென்றும்
எப்படி உருவமாகியும்
உருக்குலைந்தும் போகிறதென்றும்

இப்போது நாம் எடுத்துச் செல்லும் சொல் எது ?
விட்டுச் செல்லும் சொல் எது ?



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நான் தருவதெல்லாம்

என் கனத்த மௌனத்தில் பெருகிய வார்த்தைகளைக்
கூட்டியள்ளித் தருவேன்
வைத்திருக்க முடியுமா உன்னால்?

பொழுதெல்லாம் நீயளித்த வெஞ்சினத்தை
திரட்டித் தருவேன்
பெற்றுக் கொள்ள முடியுமா உன்னால்?

வழியில் இடைமாறி நீ விலகிச் சென்ற வேளை
என்னைப் புறமொதுக்கிய நீதியின்மையை
எதிர்கொள்ள திராணியற்ற
உன் விலகலை, தலைமறைவை
அவற்றின் உள்ளிருந்த வன்மத்தையெல்லாம்
உன்னிடமே திருப்பித் தருகிறேன்
ஏற்றுக் கொள்ள முடியுமா உன்னால்?

படுக்கையிலும் உண்ணுகையிலும்
நமக்கிடையில் கேள்விகளாயும் சந்தேகங்களாயும்
பிறந்த கோடி செதில்கள்
நம் அறிவுச் சுவர்களிலும்
முற்றத்து மரங்களிலும்
நாங்கள் திரிந்த தெருக்களிலும்
பயணித்த வண்டிகளிலும்
குளிர்ந்த நீர்ப் பரப்பிலும்
மிதந்து கொண்டிருக்கின்றன
சேகரித்துத் தரட்டுமா அவற்றையெல்லாம்?



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கனத்த உருண்டைக் கல்லொன்றின் வழியடைப்பு
உனதிருப்பு எனவாயின்
காற்றில் மிதக்கும் மென் தாழை மலர் நான்
என்றொரு சொல்லை நான் தருவேன்.
அதிலிருந்து பெருகும் வெள்ளத்தையும்
உன்னைச் சூழ்ந்து வரும்
கேள்விகளின் முகங்களையும்
வரவேற்க முடியுமா உன்னால்?

எனில் வா
கைப்பிடியளவு சிறிய வார்த்தையைத் தருகிறேன்
மலைகளின் கனதியோடும்
பூஞ்சிறகின் மென்மையோடும்
மலர்களின் வாசனையோடும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## புதிய எழுத்து

அதிகாலையில் எழுந்த போது
பனிப் புகாரைத் தவிர எதுவும் தெரியவில்லை
எந்த மொழியிலும் ஒரு சொல்லும் மிஞ்சவில்லை
எவரிடமும் ஒரு துளி நினைவுமில்லை
எல்லாம் கரைந்தழிந்தன
அந்த ஒரேயொரு விஞ்ஞானி
ஆளியைத் தவறி அழுத்திய போது.

நினைவுகள் இல்லாத மனிதர்களுக்கு
பயணங்களுமில்லை
அடையாளங்களுமில்லை
அதனால்
எந்த வீதியிலும் ஒரு பயணமும்
நிகழ்வதற்கான அவசியமிருக்கவில்லை.
என்ன அதிசயம்
நகரத்திற்கும் யாரும் வரவில்லை

எங்கே போவது
யாரைக் காண்பது
எதைச் செய்வது
தெரியாத் திகைப்புகளில்
அலைந்தன ஒவ்வொருவரின் படகுகளும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எங்கிருந்தோ வந்த மூங்கிலின் ஒலியைக் கூட
யாராலும் இனங்காண முடியவில்லை
ஒரு எறும்பையும்
அதன் பாதைகளையும்கூட.

எவரிடமும் பகைமையின் எந்தத் தடயமும்
எஞ்சவில்லை
கணவனோ மனைவியோ
பிள்ளையோ
அண்ணனோ தம்பியோ
நண்பனோ அயலவனோ விருந்தாளியோ
வேற்றாளோ காதலனோ
அதிகாரியோ பணியாளோ
யாரென்று தெரியவில்லை
யாருக்கும்.

எல்லாப் போதையும் தீர்ந்தது

ஆளியைத்தவறி அழுத்திய விஞ்ஞானிக்கு ஜே
மிஞ்சிய தொல்லெச்சங்களை
எரித்து விடும் கருவியையும் இயக்கி விடுக.

வாழ்த்துகள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வெறுப்புமிழ்ந்த கல்

ஒலிவற்றிக் காய்ந்த குருட்டு இரவில்
பழித்தன எல்லா நட்சத்திரங்களும்
சாட்சி சொல்வதற்கும் அஞ்சிய நிலவை
எந்த வசைச் சொல்லாற் திட்டுவேன்?

ஒரு வழிகேட்டு அலைகிறேன்
காவற்காரரிடம் கெஞ்சி,
படைகொண்டு போக அல்ல
பொருள்சேர்த்துப் போகவும் அல்ல
வளர்த்த நாயைக் கொண்டு செல்லவும் அல்ல
வேதனை நிரம்பி
வலியின் வேரோடிய
என்னுடலில் வளரும் நோயைக் கொண்டு தொலைக்க

பிணியெல்லாம் பரவிய ஊரில்
மருந்துமில்லை மருத்துவரும் இல்லை
பாழடைந்த மருத்துவமனைகளின்
முனகலொலி உடலையூடுருவி
நெருப்பையள்ளிக் கொண்டலைகிறது
சிதைதேடி.

குலுங்கும் மார்பிலிருந்து
கொட்டுண்டன வழுவழுப்பான
ஈரமூறிய வார்த்தைகள்.
அவற்றை நான் சேகரித்து வைத்திருந்தேன்
காய்ந்து வரண்ட கோடைக்குள்ளும்
தோலையுரித்துச் சோதனையிடும் படைவீரரிடமிருந்தும்
நானே எரிந்த பல நாட்களிலும்
அவற்றில் தீபடாமலே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவமதிப்புகளின் கீழான
நிலப்பரப்பில்
இறுகிப் படிந்திருக்கும் மௌனத்திற்கிடையில்
ஒரு சொட்டுத் துளி
உடற்சாறு தேங்கிக் கிடந்தது
வனப்பு மிக்கதொரு
கடற்கரையும்
காகங்கள் கரையும் நாட்களும் இருந்தன
எனவும்
ஒற்றையடிப்பாதைகளில்
எறும்புகள் தம்பாட்டிலும் மனிதர்கள் தம்பாட்டிலும்
போய்வரக்கூடிய காலமொன்று
இருந்ததாயும்
சொல்லிக் கொண்டு.

இன்றோ
தெருமுனையில்
பெருமரத்தின் கீழே இருந்தது கோயில்
நாயுறங்க.
நாயினடியில் ஓலமிட்டவாறு
என்னுடலும்
அதன் வால் நீண்ட
குருத்தெலும்பும்
வழியற்றுச் செத்தான் ஒரு மனிதனென்று சொல்ல.

✸



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## குழந்தைகளின் சிநேகிதன்

குளிர் விற்பவனின் மணியொலியில்
காத்துக் கொண்டிருக்கிறது
குழந்தைகளின் மகிழ்ச்சி.

அவன் உங்கள் தெருக்களில்
இசையோடும்
குளிரோடும்
இனிக்கும் நதியோடும் வருகிறான்.
அவன் வரும்போது
தாகத்தின் நிழல் மெல்ல விலகுகிறது

அலைந்தலைந்து வெம்மையேறிய
அவனுடைய இதயத்தில் நிறைந்திருக்கின்றன
அவன் தினமும் திரிகின்ற
தெருக்களின் சித்திரம்
கூடவே குழந்தைகளின் சிரிப்பொலியும்
அவர்களின் சினேகமும்.

அலைந்தே வினையாற்றும்
அவனை நாள்தோறும் காணும்போதும்
நீங்கள் ஏனறியவில்லை
அவனிடம் ஏராளம் குழந்தைகளின்
மகிழ்சியிருப்பதையும்
அவன் அவற்றைக் கொண்டு திரிவதையும்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவன் திரிந்து கொண்டேயிருக்கிறான்
ஒவ்வொரு நாளும் தெருக்களில்
தகித்துக் கொண்டிருக்கும் கோடையில்.
எதையும் பொருட்டாகக் கருதாத
உங்களுக்கிடையில்
குழந்தைகளின் சிரிப்பொலியோடும்
அழைப்போடும்.

உங்கள் குழந்தைகள் அறிந்த அளவுக்கு
நீங்கள் அறியவில்லை அவனை
இன்னும்
அவனுடைய இதயத்தையும்
அதில் நிறைந்திருக்கும் சித்திரங்களையும்
எப்போதும் கரைந்து கொண்டிருக்கும்
அவனையும்.

குழந்தைகளின் சிநேகிதன்
கரைந்தோடிச் சேர்கிறான்
குழந்தைகளின் நினைவுகளில்
இனிய குளிராகவே
கனிந்த பழமாகவே.

என்னிடமும் உண்டு
பள்ளி நாட்களில் குளிர் விற்றவனின்
மணியொலியும்
குளிர்ந்தினிக்கும் துளிகளும்
அவனிதயத்தில் நிறைந்திருந்த
குழந்தைகளின் மகிழ்ச்சியும்.

கனிந்த பழமாகவே
இனிய குளிராகவே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## உறக்கத்தில் வந்த மழை

உறக்கத்தில் வந்த மழை
தங்கியது இலைகளின் மீதும்
நிலத்தினடியிலும் மௌனமாக
தன் இரைச்சலையடக்கிக் கொண்டு
மெல்ல இறங்கியது சிறகுகளோடு

பூமியொரு பாத்திரம்
சிறகுள்ள மழையை
கருணையோடு ஏற்று
தன் மடியில் வைத்துப் பகிர்ந்தளித்தது
தாவரங்களுக்கும் கானுயிர்க்கும்
பிறவுக்கும்

குருதியொழுகும் மரங்கள்
பறக்கத் தொடங்கிய அதிகாலையில்
ஒரு மெல்லிய இருள் கசிந்து கொண்டிருந்தது
வானத்தின் அடிவயிற்றில்.

அது நிலம் விட்ட மூச்சு


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கொப்பளிக்கும் தனிமைக் குரல்களில்
ஊறிச் சுடரும் பானத்தை
நாங்கள் பருகினோம் மழையை வருடிக் கொண்டு.

கைகளிலிருந்து கழன்ற விரல்கள்
மலர்கின்றன மழைத் துளிகளில்
ஒவ்வொரு மழைத்துளியும் ஒவ்வொரு மலர்
வானம் மலர்கள் மிதக்கும்
வாசனை மண்டபமாயிற்று.

பனங்கூடலின் மீது தன்னிசையை மீட்டிய மழை
கடலின் வாசனையை
பரப்பியது பனைகளிடம்,
பனைகள் ஆடிக் களித்தன அம் மலர்த்துளிகளில்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இரண்டு குன்றுகள் ஒரு பள்ளத்தாக்கு

மழையின் ஈரம் காயாத பகல்
இருபெரும் குன்றுகளுக்கு நடுவே
நான் நின்றேன்
அருகில் நீயும் நின்றாய்

ஒடுங்கிச் சரியும் வெயிலின் ஓரம்
மலை
பூமியின் அழகைக் காட்டுகிறது
சரிவில்
மேய்கிறது ஒரு ஆட்டு மந்தை
குன்றுகளின் மேல் செடிகள்
செடிகளின் மேல்
மலையின் அழகையும் கருணையையும்
சொல்லும் பூக்கள்

குன்றுகளையும் பள்ளத்தாக்கையும்
சமன் செய்கிறது காற்று
நிழலையும்
நிழல்படு மலையையும்
சமன் செய்கிறது காற்று



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கிடைப்பதெல்லாவற்றையும் எடுக்கக் கூடிய
காற்றுக்குக் கிடைக்கிறது
வெயிலின் சூடு
நிழலின் தண்மை
மலர்களின் வாசனை
மலைகளின் மௌனம் எல்லாம்.

நெகிழ்ந்து நெகிழ்ந்து
தன்னைக் கொடுத்து
எல்லாவற்றையும் வாங்கி வாங்கி
காற்று நிரம்புகிறது எல்லாவற்றிலும்

நானும் நீயும் நிற்கிறோம்
இரண்டு குன்றுகளுக்கிடையில்
வெயிலின் ஓரம்
பள்ளத்தாக்கில்
மாபெரும் திரையாய் விரிந்த வானத்தின் கீழே
மேயும் ஆட்டு மந்தைகளுக் கெதிரில்
நிழலின் குளிரையும்
மலர்களின் வாசனையையும் அள்ளிவரும்
காற்றின் மத்தியிலே

எங்கே நாம் நின்றோம்
அதில் எப்படி நின்றோம்
நினைவிருக்கிறதா?



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பறக்கும் மலைகள்

மலைகள் பறக்கத் தொடங்கும்போது
அவற்றின் நிழல் எப்படியிருக்கும்?
பறவைகளின் பாதையில்தானா
மலைகளின் பறத்தலும்
மலைகளும் பறவைகளும்
இணைந்து பறத்தல் கூடுமோ
மலைகள் பறந்து எங்கே இறங்கும்
எவ்விதமாய்?

ஒருபோது மலைகள் பறந்து
பூமியை நீங்கினால்
பூமியின் சாயல் எவ்விதமாகும்?

சிகரமும் பள்ளத்தாக்கும் உடைய மலை எப்போதும்
பூமியின் முகம் என்றார்
ஓரிரவு வழிதவறி வந்து தங்கிச் சென்ற
விருந்தாளி

முகமற்ற பூமியில்
மூலிகைச் செடியேந்திய
மலைத்தேவதை கண்ணீர் மல்க நின்றாள்
மலை விட்டுச் சென்ற நதியோடு.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பூமியின் வாசனை

(1)
மலர்களின் வாசனை
நிறங்களில் ஊறிப் பெயர்ந்து
மலர்களையே சுற்றி படர்கிறது

கனிகளின் வாசனை
சுவையின் நரம்புகளில் விளைந்து
கனிகளைச் சூழவும் சிறகடிக்கிறது

மலத்தின் வாசனை
வயிற்றின் அழுகிலிருந்து
நழுவி நகர்ந்து செல்கிறது
ஒவ்வொரு புலனினூடும்

மாமிசத்தின் வாசனை
விந்தின் அணுக்களில் முளைத்து
குருதியாய்ப் பெருகி ஓடுகிறது
உயிர் முகம் தேடி

கடலின் வாசனை
நீர்ப் படிகத்தின் விழிகளிலிருந்து
வடிந்து பரவுகிறது காற்றின் வெளியில்

மலைகளின் வாசனை
பாறைகளின் இதயத்தில் மலர்ந்து
நதியிலும் மரங்களிலும்
ஊடுருவிச் செல்கிறது
கனன்று.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உனது வாசனை
உன்னுள்ளும் புறமுமிருந்து
எழுந் தடங்குகிறது பேரலைகளின் சத்தத்தோடு
மௌனமாக

எங்கும் தன் வாசனையை நிரப்புகிறது
மரணம்
முடிவற்று
அதே தாளத்தோடும்
அதே கதியோடும்.

*(2)*
நம் காலடியிலிருந்து விரியும்
இப் பேரண்டப் பெருவெளியில்
நிரம்பிய வாசனை
கோள் மலர்களின் இதழூறிப் பெருகி வந்தது

ஒவ்வொரு கோளும் தம் உயிர்ச்சுனையிலிருந்து
ஊறும்
ஒவ்வொரு வாசனையோடு
இவ் வெளியை நிரப்புகின்றன.

நட்சத்திர மண்டலங்களின்
ஒளி பொருந்திய வெளியில்
ஒவ்வொரு கோளும் ஒவ்வொரு கண்
ஒவ்வொரு கண்ணும்
வெளி நிரப்பும் பேரொளி மண்டலம்

நீல ஒளி மிக்க
இம் மண்டலத்தில்
நிறங்களின் வாசனை
பேரண்ட வெளியாகிறது விரிந்து விரிந்தே.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இந்தப் பேரண்ட நிகழ்வின்
முடிவிலாப் புள்ளியில்
முளைத்த விதி ரேகையோ
தன்னை நிகழ்த்துகிறது
திசைகள் கரைந்த பயண வெளியில்
வாசனை மண்டலத்தை.

நீக்கமற்று நிறுத்தமற்று நிகழும்
பேரண்ட நிகழ்வில்
எல்லாவற்றுக்கும் அப்பால்
பூமி கொண்டிருக்கிறது தன் வாசனையை
இன்னொரு அதிசயமாய்.

பூமியின் வாசனையோ
கோள்களுக்கு வியப்பூட்டும் நிகழ்வு.

உயிரின் ஒளித்தெறிப்பு
குளிரும் நீர்ப்படிகக் கருணை யூற்று
பேரதிசயமாய்
பிற கோள்களை விடவும்
பேரண்டப் பெருவெளியில்
பூமியின் வாசனை நிகழ்வு

வாசனை மிதக்கும் பெருவெளியில
ஒரேயொரு கிரகத்தின் வாசனை
விலகி நீர்ப்படிகமாய் மிதக்கிறது
அதனுள்ளே உயிரும் உயிரும் மோதும் ஓசை

கேட்டதிர்கிறது
பிரபஞ்சம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மாமிசம்

*(1)*

ஆதியிலே மாமிசம் இருந்தது
அதன் பிறகும் மாமிசம் இருந்தது
கனிகளினுள்ளே காயங்களோடு
காயத்தின் மீது கனிச் சுவை ததும்ப
மலரின் மென்னிதழ் விளிம்பெலாம்
கலந்து பரவியது
மாமிச வாடையும் கனிமலர் கலந்த வாசனையும்.

இப்போதும் மாமிசத்தை
வாங்கிப் போகும் பெண்ணிடம்
எதைக் கேட்பது
இந்தப் பசிக்கு?

அவளுடலின் இரத்த வாடையை
அவளுடலின் பால் வீச்சத்தை
மறைத்துக் கொண்டு அவள் போகிறாள்
காற்றையும் அள்ளிக் கொண்டு போகும்
மாபெரும் சமுத்திர அலைகள் தானென்று.

பெண்ணுடலில் விளைந்த
மலைகளையும் ஆறுகள் நிலப் படுகைகளையும்
வெளிகள் சமுத்திரங்களையும் கடந்து
மலர்களையும்
பசுமை நிரம்பிய இலைகளையும்
சுவையூறிய கனிகளையும்
அள்ளிக் கொண்டேன்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவளுடலில் திளைத்துக் கொண்டிருந்த
மாமிச வாடை மெல்லக் கிளர்த்தியது
என்னையொரு மிருகமாக.
நான் தோற்றேன்
அத்தனை கால பிரார்த்தனையிலும்.

அவளுள்ளிருந்த கள்ளின் ஊற்றை
பெருக்கிவிட்டபின் பாய்ந்தது பேரருவி
என்னுடலை இப்போது மாமிசமாக்கி உண்டாள்
தன்பசி யெல்லாம் தீர.

காலமுழுதும் அடக்கிய அவள் பசிக்கு
என்னைத் தின்னக் கொடுத்தேன்
முடிவற்று
என்பசியும் அடங்கவில்லை முடிந்து

*(2)*

ஆதியிலே மாமிசம் இருந்தது
அதன் பிறகும் மாமிசம் இருந்தது
என்றான் ஒரு நண்பன் பெண்ணுடலில்
தன்னை இறக்கிக் கொண்டே

அவன் அறிய அறிய
அவளின் ஆழம் பெருகியது
மாபெரும் சமுத்திரமாகி
எண்ணத் தீரா அலைகளாகி.

அவளும் அறிந்தாள்
அவனும் ஒரு மாபெரும் சமுத்திரம் தானென்று.

ஆதியிலே மாமிசமிருந்தது
அதன் பிறகும் மாமிசம் இருந்தது
இப்போதும் மாமிசம் இருக்கிறது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**பெண்நிழல்**

தன்னுடைய இளமைக் காலத்தின் கதிர்களை
விதையாக்கிய பெண்
அதை மீண்டும் பயிராக்கினாள்
தன்னுடலின் வெப்பத்திலும் ஈரத்திலும்

ஆதியிலிருந்து தொடர்ந்து வரும் வேரை
அதன் வாசனையோடு
தன்னுள் கொண்டிருக்கும் அவளிடம்
தலைமுறைகளிடம் தன்னைப் பரிமாற்றிக் கொள்ளும்
வித்தை நிறைய இருந்தது.

அவளே வேராகவும் விதையாவும்
தன்னுடலில் இருந்து விளைந்து கொண்டிருந்தாள்
ஓயாது

அவளில் கிளர்ந்த தானிய வாசனை
தாயின் முகத்தை வரைந்தது
மலர்களின் நிறத்தை அள்ளி
அந்த முகத்தில் பயிரிட்டது
கடலின் மீது அதை ஒரு படகாக்கி
மிதக்க விட்டது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எல்லா ஒளிக்கதிர்களிலும்
தன்னைப் பரப்பும் வல்லமையுடைய
வாசனை நிரம்பிய அந்த வேர்
இளமை குன்றா நதியில் கரைந்து
இடையறாது பாய்ந்து கொண்டிருக்கிறது
மணம் பரப்பி

தன்னுடைய இளமைக் காலத்தின் கதிர்களை
விதையாக்கும் பெண்
அதை மீண்டும் பயிராக்குகிறாள்
தன்னுடலின் வெப்பத்திலும் ஈரத்திலும்
காதல் மிகக் கொண்டு
தாயாகி

இடையறாது விளைகின்றன
வேர்களும் விதைகளும்
அவள் உடலில்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அம்மா

ஒரு போதும் நிழலுறங்காத் தெய்வம்
ஒற்றைக் கண்ணோடு இரவு பகலாய்
அலைந்தது பனங்காட்டிடை

தெருக் கிணற்றில் நீரேந்தி
நடந்து வரும் அம்மா
பெரும் சுமையை வயிற்றிலும் மனசிலும்
இறக்க முடியாமலே வைத்திருந்தாய்
கால முழுதும்

ஒரு போது இறக்கினாலும்
மறுபடி மறுபடி
அவை ஏறி விடும்

மண்குடிசையில் உப்பிட்ட சோறு
நிலா முற்றத்தில் உறக்கம்
வதைபடலின் வலியெல்லாம் குடித்து
விரிந்த திசையே
வணங்குகிறேன்

எதிலும் வெல்ல முடியாது
தோற்ற போதும்
கலக்கமின்றியிருந்த அம்மா
தோற்றதில்லை நீ ஒரு போதும்

தோல்வியின் சினமோ கலக்கத்தின் நிழலோ
படிந்ததில்லை உன் அருகிலும்
திசையிலும்.

மகா காலம் நீயம்மா.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பசியின் வேரோடி
உன் பிள்ளை மலைகள்
நொருங்குண்டு போகவில்லைச் சிறு மணலாக
இதோ
அருவி பொங்கிப் பாயும்
கண்கள் ஆயிரத்தோடு
ஒவ்வொரு மலைகளும்
ஒவ்வொரு சிகரங்களும்

"கொடிதிலும் கொடிது
இளமையில் வறுமை'
என்றழுத கண்களைத் துடைக்கின்றேன்.

உன்னிதயத்தை மெல்ல வருட விடு
உன் நிழலில்
இதோ புதிய முளைகள்
செழித்துப் பெருக்கின்றன

நமது புறாக்கள் நமது குயில்கள்
நமது மலர்கள் நமது வாசனை என்று
இளவேனில் நிரம்பிய வனம் சடைத் தெழுகிறது

அம்மா
எங்கள் மகா காலமே
விரிந்த திசையே வணங்குகிறேன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மிருகம்

பூக்களால் நெய்யப்பட்டிருந்த
நிழல் படர்ந்த பூங்காவில்
வீதிக்கோ மைதானத்துக்கோ
முகத்தையோ உங்கள் முதுகையோ
காண்பித்துக் கொண்டிருந்தபடி
நீங்கள் பேசிக் கொண்டிருக்கும்போது
வந்த துப்பாக்கி
உங்களை முகர்ந்து பார்க்கிறது
ஒரு வினோதமான பயங்கரப் பிராணியின்
மூச்சொலியுடன்

அக்கணத்தில்
உங்கள் இதயம் பேச்சடங்கி
காய்ந்துலர்ந்தது அதிசயமல்ல
முறைக்காமல் அத் துப்பாக்கி
சிரித்தது நம்பமுடியாதவாறு
கண்சிமிட்டி
ஒரு பொம்மையின் குறும்புடனும்
ஒரு நாய்க்குட்டியின் வெகுளித்தனத்தோடும்

மரக்கிளைகளில் ஊர்ந்த காற்று
தன் வேடிக்கைக் குணத்தையெல்லாம் விட்டுவிட்டு
இலைகளில் மறைந்தது
அஞ்சிக் கறுத்து
துப்பாக்கியின் குருதிப் பெருக்கில்
படர்ந்தலையும் அவலக் குரல்களின் நினைவு பெருகிவர


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யாருடையதோ சாவுச் செய்தியை
அல்லது கடத்தப்பட்டதான
தகவலைக் கொண்டுபோகக்
காத்திருந்த தெரு
நகர்ந்து செல்லும் துப்பாக்கியைக் கடைக்கண்ணால்
பார்த்துக் கொண்டிருந்தது
துக்கத்தின் முனையுடைய
தன்னுடைய சிரிப்பை
எப்படி வரவேற்பதென்றும் எப்படி விலக்குவதென்றும்
தெரியாமல் நீங்கள் தடுமாறுவதைக் கண்ட
துப்பாக்கி
நமுட்டுச் சிரிப்போடு
உங்களிடமிருந்து மெல்ல நகர்ந்து
ஒரு கடை வாசலில் ஏறியது

அங்கே அது பொருட்கள் அடுக்கப்பட்டிருந்த
தட்டுகளின் இடைவெளியில்
மெல்ல மறைந்தது யாருக்கும் தெரியாமலே

பிறகு நீங்கள் செல்லுமிடமெல்லாம்
அது தொடர்ந்து வருகிறது
நீங்கள் அறியாமலே
உங்களைக் கண்காணித்தபடி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அப்படியிருக்கையில் அது காணாமற் போய்விடுகிறது
திடீரென்று
எதிர்பாராத சந்தர்ப்பத்தில்
மீண்டும் உங்களின் முன்னே நிற்கிறது
ஒரு விருந்தாளியைப் போல
ஒரு விரோதியைப் போல
ஒரு நண்பனைப் போல
ஒரு கட்டளையைப் போல
ஒரு வழிகாட்டியைப் போல
ஒரு காவற்காரனைப் போல
ஒரு கடுமையான படையாளாக
ஒரு சிறைக்கூடமாக
ஒரு சுமைகூடிய அமுக்கமாக

உங்களருகில் அது அமர்கிறது
தன்பாட்டிலே
நீங்கள் எதையோ சொல்ல முனையும்போது
அதையெல்லாம் பொருட்படுத்தாமலே
அது எதையோ யோசித்தவாறிருந்தது
கலவரத்தையூட்டியபடி

இப்போது நீங்கள் பூங்காவை விட்டு
வெகுதூரம் வந்தபோதும்
'பின் தொடரும் நிழலின் குரலில்'
மறைந்திருந்த துப்பாக்கியின்
குருதி மணம்
பெருக்கிக் கொண்டிருந்தது
உங்கள் மூளையிலும்
விழிகளிலும் இதயத்திலும்
தன் கூர் முனையை நுழைத்தவாறு

இப்படியே துப்பாக்கியின் நிழலில்
மெதுவாக ஊர்ந்து கொண்டிருந்தது
மாநகரம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இன்னும் கொஞ்ச நேரமிருந்தால்
இந்த அவசரத்துக்கு
என்ன நடந்து விடப்போகிறது

தயக்கமுறும் நிழல்கள்
பின்னகர
இருளின் வாசம் நம்மீது கவிகையில்
அவிழும் நினைவுகளில்
எது யாரிடம்
எது யாரிடமுமில்லை

ஒருமித்த ஞாபகங்களை
விலக்கும் கணங்கள்
எதிரெதிர் முனைகளில்
காந்த விசையைப் பெயர்த்தனவா
அறியேன்

எறும்புகளின் வன்முறையில்
உண்டா அடையாளமும்
பிரகடனமும்
அவற்றின் சினேகத்துக்கு
இருக்கிறதா பாடலும் இசைக் குறிப்புகளும்

துக்கத்தின் வலியில் சிதறுண்ட
எறும்புகளின் பாதையில்
ஏதெனுமொரு ஞாபகத் துண்டைப்
பார்த்தாயா



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பறவைகளிலும் பூக்களிலும்
உன்னைப் பகிர்ந்தளித்து விட்டுப்
போனாய்
கரைந்து

தவிர்க்க முடியாதவாறு
நம் தனிமைக்குள் ஊடுருவி
நெடும் பயணம் நிகழ்கின்றன
உன் கண்கள் எடுத்துவந்த காட்சிகள்

எந்த வாசலிலும்
இல்லை
யாருடைய வரவேற்பும்

பனி விலகத் துடித்தெழும் தெருவில்
ஒரு பள்ளிச் சிறுமி
நகர மறுத்த காலப்புள்ளியில்
நின்று விளையாடுகிறாள்

நீறியும் விளையாடுகிறாயா
கமெராவுடன்

திகைத்து நின்று
வழி மறிக்கும் நமதன்பு
தத்தளிப்புடன்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கறுப்பு நாய்
அதன் நிழலை விடக் கறுப்பாயிருக்கிறது

அதன் குரைப்பொலியை விடவும்
நிழலின் மௌனம்
வலியது பெரியது

கறுப்பு நாயின்
கோபத்துக்கும் பாய்ச்சலுக்கும்
ஈடுகொடுத்தபடி நிழலும்

நிழல் நாய்கிருக்குமா
மோப்ப வாசனையும்
பழகிய திசைகளின் ஞாபகமும்

கறுப்பு நாய் சார்ந்திருக்கிறது
எப்போதும் நிழல் நாயில்

நிழல் நாயின் மௌனத்திலிருக்கிறது
கறுப்பு நாயின்
உயிர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மூடிய ஜன்னல்

அந்தரித்துத் தவிக்கும்
இசைக் குறிப்புகளின் பின்னோடி
ஒரு மரக்கிளையில் உறங்கிய
உன் கண்களை எடுத்து வந்திருக்கிறேன்

தீராத மோகத்தோடு
என்னைக் கவ்வி
இழுத்துப் போன அந்தக் கண்கள்
உன் படுக்கை மீது
என்னைச் சாய்த்து விட்டு
நாம் சேர்த்த இசைக்குறிப்புகளால்
என்னைப் போர்த்திய பின்
மெல்ல வெளியேறிப் போயின

யன்னலோரத்தில்
நினைவுக்கும் கலக்கத்துக்குமிடையில்
துடித்துக் கொண்டிருக்கும்
வாழையிலையில்
தத்தளித்துக் கொண்டிருந்த
இசைக்குறிப்புகள்
என் போர்வையிலிருந்து எழுந்து சென்றவையா?


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வெளியேறிப் போன கண்களைத் தேடியலையும்
யாத்திரையில்
இளமையின் பிரியாவிடை
காலடியில் நிகழ்கிறது
எனக்கும் உனக்குமிடையில்
அந்தரித்து

ஏனின்னும் உட் திரும்பல்களில்லை
எப்போதும்
எதிர் முனைப் பயணங்களில்
தீராப் பிடிப்பென்ன

அறியேன் அறியேன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## குழந்தையின் குரல்

தத்தளிக்கும்
ஒரு குழந்தையின் குரல்
திருவிழாவிலிருந்து விலகிவிட்டது

கூட்டத்தில் நசிபடாமல்
அந்தரிப்போடும் துயரின் கனதியோடும்
அது பெருகிப் பரவுகிறது எங்கும்

அப்படியே
திருவிழாவைத் தீண்டி
அதன் மேல் விசமாகப் பரவி
தன்னை எழுப்பி விடுகிறது
மாபெரும் துயரொளியாய்

அப்பெரும் கொண்டாட்டத்தில்
குழந்தையின் குரலில் மிதக்கும்
தத்தளிப்பை
திருவிழா பகிர்ந்தளித்தது
ஒவ்வொருவரிடமும்

தத்தளிக்கும் குழந்தைக் குரலை
எடுத்துச் சென்றனர்
ஒவ்வொருவரும்

இன்னும்
தத்தளிப்பை குழந்தையிடமே மிஞ்சவிட்டு.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கரைய முடியா நினைவுகளின் மீது
என் தனிமை மிதக்கிறது
திறந்த கண்களுடன்

மறக்க முடியா நினைவுகளையும்
கனவின் தீராக்காதலையும்
தன் முடிச்சுகளில் வைத்திருக்கும் தனிமையின் கீழ்
துயரின் வேர்கள்
கூடவே சிறகுடைய மலர்களும்
அவற்றின் மீது
கடவுளின் நிறம் எப்போதுமிருக்கிறது

திரும்பிச் செல்ல முடியா இடங்களையும்
மறுபடி
காணமுடியாக் காட்சிகளையும்
சந்திக்க முடியா நண்பர்களையும்
மீண்டும் பெற முடியா முத்தங்களையும்
பிரிவின் இசையோடு சேமித்திருக்கின்றன

வாழ்வுக்கும் மரணத்துக்குமிடையில்
நிரம்பியிருக்கும் சுனையில்
மிதக்கின்றன
கரைய முடியா நினைவுகள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தூக்கத்தை தொலைத்த கிழவன்

பின்னிரவில் தூக்கமின்றித் தவிக்கும் கிழவன்
கனவு அழைத்துப் போகும்
இளமைக் காலத்துக்கும்
பிள்ளைகள் கொண்டு சென்ற
தூக்கத்துக்குமிடையில் கிடந்து அவிகிறான்

இருளைக் குவித்து வைத்திருக்கும்
அந்த வீட்டில்
பிள்ளைகளின் குரல்கள்
சத்தத்தை அடக்கி
சுவர்களில் படிந்திருப்பதாக நம்பும் கிழவன்
அக் குரல்கள் அதிகாலையில் ஒலிக்காதா
என்று விழித்திருக்கிறான்.

ஒரு முனையில்
கிழவன் முன்னிரவில் பேசும்போது
அதே கணம்
மறு முனையில்
பிள்ளை பதிலளிக்கிறான் அதிகாலையில்.
இக் கால முரணுக்கிடையில்
தன்னைக் கொடுத்திருக்கிறது
அன்பை ஊற்றிச் செல்லும் தொலைபேசி
கண்டங்களுக்கும் கடலுக்கும் அப்பாலான
கருணையில்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அதிகாலையில் நிராதரவின் தத்தளிப்பு நிரம்பிய
கிழவனின் குரலை
கருணையுள்ள தொலைபேசி
எடுத்துச் செல்ல முயன்றபோதும்
முடியவில்லை
பிள்ளையின் இரவு கதவைச் சாத்தியிருந்தது
ஆழ்ந்த உறக்கத்தில்.

அப்போது அங்கே நள்ளிரவு
வழியற்ற கிழவன்
தன்னுடைய சூரியனை பின்னிரவிலிருந்து
பெயர்த்தெடுத்து அனுப்புகிறான்
பிள்ளையின் குரலை அது எழுப்பட்டுமென்று.

வெவ்வேறு கண்டங்களுக்கிடையில்
வெட்டித் துண்டாடப்பட்ட
அன்பின் உடல் கிடந்து துடிக்கிறது
தந்தையென்றும் பிள்ளையென்றும்
அங்கும் இங்குமாக

உலகம் சுருங்கியதென்று சொன்னவர் கண்களில்
கொப்பளிக்கும் கண்ணீரை
எந்தப் போத்தலில் அடைப்பேன்?



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தெற்குத் தெரு

நாங்களிருந்த தெற்குத் தெருவை
ஆடுகளின் தெரு என்றார்கள்.
ஆட்டின் குரல்களும்
மொச்சையும் மீந்திருக்கும் தெருவில்
எப்போதும் ஆடு வாங்கிப் போகும்
கரீம் காக்கா ஆட்டு வாசத்தோடு திரிந்தார்.

ஆட்டிடையனுக்கும் கரீம் காக்காவுக்கும்
தீராப் பிணக்குகள் ஏராளம்
என்றபோதும்
இருவருடைய பொழுதுகள்
ஆடுகளில்தான் விடிந்தன
ஒருவனிடம் கத்தியிருந்தது
ஒருவனிடம் தீனியிருந்தது.

ஆட்டிடையனின் மடியிலும் மனசிலும்
துள்ளிவிளையாடும் ஆட்டுக் குட்டிகள்.
தோளில் தூக்கிப் போட்ட குட்டியோடு
வீதியில் வரும் புத்தனை
அழைத்துப் போகும் ஆடுகள்
காலையிலும் மாலையிலும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆட்டிடையனின் மீதிருந்த ஆட்டு மொச்சை
கரீம் காக்காவிடமும் படிந்திருந்தது
ஆட்டின் நிறங்களோடும்
சாயல்கள் மற்றும் குரல்களோடும்.
அவருடைய கத்தியிலும் இருந்தது
காயாத குருதிக்கறையும்
ஆடுகளின் தீனக்குரலும்.

ஆடுகளின் தெருவில்
எப்போதுமிருந்தன மாமிசத்தின் கசாப்பு நெடி
கூடவே நிழல் விரித்திருந்தது
ஆடுகள் உண்ணும் குழையின் வீச்சமும்
பால் மணமும்
குட்டிகளின் துள்ளும் குரலிசையும்.

நாங்கள் ஆடுகளின் தெருவில் இருந்ததாகவே
எல்லோரும் சொல்லிக் கொண்டார்கள்
இத்தனை கொலை நடந்த தெருவில்
யாரும் இந்தக் கொலைகள் குறித்து வருந்தவேயில்லை
ஒரு நாளேனும்
யாரையும் தேடி காவலர் வந்ததில்லை
விலங்கோடு
ஆடுகளின் தெருவில்
எதுதான் நடக்கும் எதுதான் மிஞ்சும்
தெரியவில்லை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வடக்குப்படை வீடு

வடக்கில் படை வீடுகளிருந்தன

குருதி வடியும் கண்கள் தெறித்துப் புரண்ட
படை வீட்டில்
இருண்ட காலத்தின்
பயங்கர நிழல்கள் மினுங்கும்
பாழ் கிணறிருந்தது.

பாழ் கிணற்றில் மிதக்கும்
இளம் பெண்களின் விம்மலொலியில்
எப்போதும் படைவீடு
போதை கொண்டது.

கடத்தப்பட்டவரின் தனிமைக்குரல் படிந்த
வீட்டின் சுவர்களில்
கூறொளிரும் வெண்குருதி வடிந்து கொண்டிருக்கிறது
காயாமலே.
அதில் ஒவ்வொரு வதையிலும்
உயிரணுவின் கண்ணிகள் பிளவுண்டு
ஓலமிட்ட மனிதனின் நிழலும்
அதை விரும்பிப் போதை கொண்டவனின் முகமும்
தெரிகிறது
ஓவியத் தொகுதிகள் பலவாக.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வதையின் முன்னே மண்டியிட்டவரின்
ஒவ்வொரு காட்சியையும்
ரசித்துக் கொண்டிருக்கும்
படை அதிகாரியிடம்
தன்னுடைய விருப்பங்களைச் சொல்லத் தயங்குகிறான்
எப்போதும் அதிகாரியின் நிழலைத்
தொழுது கொண்டிருந்த சிப்பாய்.

சிப்பாயின் காதல்
அவனுடைய இதயத்திலும்
அதிகாரியின் காலடியிலும் நசுங்கிக் கொண்டிருக்கிறது.
துயரம் மிகக் கொண்ட
ஒரு விசுவாசியின் விசுவாசத்தை
எப்படி எஜமானனிடம் தெரிவிப்பது என்பதை
எத்தனையோ தடவை ஒத்திகை பார்த்தபிறகும்
சறுக்கியே செல்கிறது.
அவனுடைய விருப்பங்களைச் சுமந்திருக்கும் குதிரை.

தானியக் குதிர்களில்
தன் சப்பாத்துகளையும் காதலியின் கடிதங்களையும்
மறைத்து வைக்க விரும்பும்
படைச்சிப்பாய்
பூங்காட்டில் தனக்கான பெண் பறவையை
தேடிக் கொண்டிருக்கிறான்
ஆற்றில் இறங்குவதற்கு முன்னர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வடக்குப்படை வீட்டில் இன்னும் கேட்டுக் கொண்டிருக்கும்
இளம் பெண்களின் முனகலொலியில்
நடுங்குகின்றன இலைகள் ஒவ்வொன்றும்.

சிப்பாயின் காதில் விழுகிறது
அவனுடைய காதலியின் குரலும்
அவள் சிந்தும் அன்பின் துளிகளும்.

வடக்குப் படை வீட்டில்
மறுநாள் சிப்பாய்களின் கலங்கிய விழிகளினூடே
காலைச் சூரியன் தயங்கி வந்தபோது
அதிகாரியின் மரணத்தை கொலை என்று
அறிக்கையிட்டுக் கொண்டிருந்தார்கள்
விசாரணை அதிகாரிகள்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நிழலை விலக்க முடியாத போது
தோற்றுப் போன போர் வீரன்
பாதுகாப்பில்லாத வெளியில்
தனித்து விடப்பட்டதாக உணர்ந்தான்

மூடியிருந்த கதவுகள்
அவனை அச்சமடையச் செய்தன
திறந்திருந்த கதவுகளும்
அபாயமாகவே தோன்றின

இருள் பாதுகாப்பானது என்று தெரிந்த
மறுகணமே அது
பயங்கரங்களின் ஆழ்கிடங்கெனத் திடுக்கிட்டான்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சாவிகள் தாமே இயங்கி
திறந்து கொள்ளும் வேளை கனிந்து கொண்டேயிருக்கும்
என்பதைக் கண்டபோது
பூட்டுகளில் திறப்புக்கான வழிகள்
அவனைப் பார்த்துச் சிரித்தன.

எந்தப் பூட்டிலும்
எந்தச் சாவியிலும்
திறப்பதற்கான வழியே
எப்போதுமுண்டு என்ற
அக் கேலிப் புன்னகை அவனிடத்தில்
ஒரு குற்றவுணர்ச்சியாகப் படிந்தது

அவன் விலக்க முடியாத நிழலோடு
சேர்ந்திருக்கவும் முடியாமல்
தன் தலையைத் தானே சீவியெறிந்தான்
பதற்றத்தோடும்
அச்சத்தோடும்
வியர்க்க வியர்க்க.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சவப்பெட்டியின் நிழலில் துளிர்த்த வேர்கள்
அதி பயங்கரமாகவும்
சாவகாசமாகவும்
வளர்ந்து செல்கின்றன
என் தூக்கத்தினூடும்
விழிப்பினூடும்

ஞாபகங் கொள்ள முடியாத
பூச்செடிகளில்
யாரோ விட்டுச் சென்ற
புன் சிரிப்பின் மீது
இரத்தத் துளிகளின் நடனம்
பாம்பின் நளினத்தோடு.

காதருகில்
அச்சமூட்டும் ரகசியங்களைச் சொல்லும் எதிரி
அழைத்துச் சென்ற விருந்தில்
எதிர்பாராதவிதமாகக் கண்டேன்
கிறிஸ்துவை.

தலை கவிழ்ந்தபடியிருந்தார் அவர்
தியானமா அவமானமா
கனவுகளில் எரிந்து கொண்டிருந்தது

பன்னூறு ஆண்டுகால
தோல்வியின் நிழலைப் பிரதிபலிக்கும்
அந்த விழிகளில்
சகிப்பின் கடைசிக் கணம்
முடிவடைவதைக் கண்டேன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மிச்சம்

பயணப் பொதியுள் அடக்க முடியவில்லை
எல்லாவற்றையும்
மிஞ்சிக் கிடக்கும்
ஈரமுலரா நினைவுக் குவியலின் உள்ளிருந்து
ஒரு நூலாக தொடர்ந்து வரும் உயிரிழையில்
ஆலாவின் குரல் மீட்டுகிறது
குளத்தின் சங்கீதத்தை.
அதில் மிதந்து கொண்டிருக்கின்றன
ஆலாவுக்கு அஞ்சி
கோழிக் குஞ்சுகளை காப்பாற்றத் துடிக்கும்
பெரியம்மாவின் பதற்ற ரேகைகளும்
தத்தளிக்கும் மீன்களின் அச்சமும்.

பட்டிப் பூ முகம்
மணற் திட்டில் சிதறிக் கிடக்க
கள்ளு வாசனையோடு தெருநீளம்
பாட்டை விதைத்துப் போகும்
'முட்டுக்காய் கணவதியை
குரைத்து விரட்ட முடியாத நாய்கள்
நினைவுக் குவியலுள்
வாசனையோடு நுழைந்து விட்டன.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கண்ணகி கோவில் முற்றத்தில்
பொங்கலுக்குக் கூடிய சனங்கள் விட்டுப்போன
காலடிகளுக்கடியில் ஒளிந்திருந்து
என்னைக் கண்ட சில்லறைக் காசுகளும்
இந்தப் பயணப் பொதியுள் அடங்கவில்லை
மிஞ்சிக் கிடக்கும் நினைவுக்கட்டியுள்
தகதகத்துக் கொண்டிருக்கும் வெள்ளிகள்
ஒவ்வொன்றையும் எடுத்தபோது
அந்தக் காசுகளில்
துக்கத்தின் ஈரம் படர்ந்திருந்ததைக் கண்டேன்.

முந்திரிக்காட்டு வாசனையில் கிறங்கி
கூத்தாடிய பனந்தோப்பில்
பித்தனின் இராப்பாடல் கேட்க நிலா
பனைகளுக்கிடையே இறங்கி வந்தது.
மொச்சை வீச்சம் நிறைந்த
'ஆட்டுக்கார ராசையா' எங்கே?
திறந்திருக்கும் பட்டியில் ஆடுகளில்லை
என்றபோதும் மணம் வீசுகிறது
காட்டில் மேயப்போன ஆடுகளுடன் போனாரா
இல்லை
இன்னொரு கிறிஸ்துவை
அழைத்துப் போயினவா ஆடுகள்
மேய்ச்சற் காட்டுக்கு?



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முந்திரி வாசம் குடித்த
இராப் பாடகனைச் சுற்றியிருந்த ஊர்ச் சனங்கள்
கூத்துப் பாடலோடு உறங்கிப் போனார்கள்
கொன்றற் பூக்களின் அலங்காரத்தில்
அவிழ்ந்து கிடந்த ஒழுங்கைகளையும்
காட்டு வழியில்
கனிந்திருந்த பழங்களில் விளைந்திருந்த
அழைப்பையும் விட்டு
ஒரு பயணி போகிறான்
ஊரின் தோலை உரித்துக் கொண்டு

தோலுரிந்த ஊரின்
துயரப் பொதி கிடக்கிறது
அவனுள்ளே மலையின் கனதியோடும்
மணலின் விரிவோடும்.
அவன் அடக்க முடியாப் பயணப் பொதியின் அருகில்
கிடக்கும் நினைவுக் குவியல் வளர்கிறது
மலையாக
விரிகிறது மணற் பெருக்காக
துயரப்பழம் உடைந்தோடுகிறது நதியாக.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தொலைக்காட்சியிலிருந்து வழிந்த
இரத்தம்
அறையில் நிரம்பியது கலவரத்தோடு

வெளியேறவும் முடியாமல் உள்ளடங்கவும் முடியாமல்
சுவர்களில் மோதித் திரும்பும்
அவலக் குரல்களை பின் தொடர்ந்த
இரத்தம் எங்கும் உறையவேயில்லை
தளும்பிக் கொண்டேயிருந்தது
அந்த அறைமுழுதும்

வெளியே வேலை முடித்து வந்த
அவர்கள்
வீட்டைத் திறப்பதற்கு சாவியை துவாரத்தினுள்
செலுத்தியபோது கண்டார்கள்
கதவின் இடைவெளியினூடே
இரத்தம் கசிந்த கொண்டிருப்பதை

துவாரத்தினுள் திறப்பை செலுத்திய போது
பீறிட்டது இரத்தப் பெருக்கு
சாறு நிரம்பிய பழம் உடைந்ததாய்.

அந்த அறை வன்முறையில்
கனிந்திருந்தது
இரத்தப் பழமாகிய அறையில்
படுத்திருக்கத்தான் வேணும்
அந்த உதிர மணத்தின் மத்தியில்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இன்று
வேறு எந்த இடத்தையும் தேர்வு செய்வதை விடவும்
இது மேல் என்பேன்.
இன்னொரு அறையில்
கத்தியோடும் துப்பாக்கிகளோடும்
கதறியழும் பேதமை நிரம்பிய விழிகளோடும்
இன்னும் யாராவது எதிரில் நிற்பதை விடவும்
உதிரம் நிரம்பிய அறையினுள் இருப்பது மேலானது.

இதையே நாம் இப்போது விரும்புவதாக
கடவுளுக்கும் சொல்லி விடுங்கள்
தேநீர்க் கடையிலோ
பேருந்து நிறுத்தத்திலோ
சந்தையிலோ
நீங்கள் அவரைப் பார்க்கும்போது
இதை மறந்து விடாதீர்கள்

சிலவேளை அவர்
அவசரமாகவோ பதற்றமாகவோ நிற்கக் கூடும்
அல்லது
நீங்கள் அவசரப்பட்டுக் கொண்டிருக்கலாம்
ஆனாலும் இதை மறந்து விடாதீர்கள் தயவு செய்து


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒரேயொரு ஆறுதல்
இப்போதைக்கு தொலைக்காட்சிக் குருதி
அறையில் மணக்கப் போவதில்லை
ஆனாலும் இந்த ஒத்திகையில்
முளைவிடும் இரத்த நாட்கள்
பிறகு
அறையில் நிரம்பி தெருவிலோடி
ஊர்க் குளங்களில் நிரம்பி
கிணறுகளில் ஊறி
உங்கள் வயிற்றிலும் வாயிலும் இரத்தமேயாகி
அதுவே மிஞ்சிய ஒரேயொரு சுவையாக மாறி

அப்படியொரு நாள் விடிவதற்கிடையில்
நான் வாழ்ந்து விட வேண்டும்
இந்த இரத்தப் பெருக்கினுள்ளேயே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## குற்றமும் தண்டனையும் மன்னிப்பும்

யார் செலவாளி
யார் உபகாரி
யாரிடமில்லை உபயோகம்
யாரிடமிருக்கு பலயோகம்?
தோசையில் அதிகம் உப்பிருந்தால்
பாத்திரங்கள் சிதறுவதேன்
பதறும் மனதில்
மூழ்குகின்றன தோணிகள்
வசையும் குற்றமெறிதலும்
அவ்விரவைக் காயப்படுத்தின.
சுவர்களில் நடுங்கிக் கொண்டிருந்த
தவறிய வார்த்தைகளைக் கண்டு
பூனைகளும் பயந்தன.

சிதைந்த சூழலைச் சொல்லியவாறிருக்கும்
பாதியுணவு
அன்றைய காயம்
இன்னும் மணத்துக் கொண்டிருக்கிறது

இரவுச் சாப்பாட்டின் போது முளைத்த
இந்த விலகல்களும் எதிர்ப்புணர்வும்
இறுதி விருந்தாகக் கூட இருக்குமா?

எதுவும் தெரியவில்லை.

பெருகிச் செல்லும் இடைவெளியில்
அவரவர் தம்பாட்டில் வெளியேறிக் கொள்கிறோம்
ஒரே கட்டிலில் இருந்து
எதிரெதிர்த் திசைகளில்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒலியற்றுக் குவிகின்றன ஏராளம் சொற்கள்
வெம்மையோடு
கண்ணீரோடு
வேதனையோடு
பிடிவாதங்களோடு
எப்போதும் உடைந்து பெருகும் நிலையில்
இருவருக்குமிடையில்
ஒரு கண்ணாடிப் பாத்திரத்தில்.

இடையில் நெருங்க முடியாது
வளர்ந்து கொண்டிருக்கும் சுவரினோரம்
எனது குற்றவுணர்ச்சி
அவளைப் பின்தொடர முயற்சித்துக் கொண்டேயிருக்கிறது
மன்னிப்புப் பத்திரங்களுடன்

காலையை எப்படி எதிர்கொள்வது
அவளுடன்?

காயாதிருக்கும் அந்தச் சொற்கள்
சாப்பாட்டு மேசையில் குவிந்திருக்குமா
அவளுக்கும் எனக்குமிடையில்?

ஆனால் அவளோ
கிறிஸ்துவாகியிருந்தாள்
புதிய விருந்தில்
எல்லாவற்றையும் மறந்து
அல்லது எல்லாவற்றையும் அறிந்து கொண்டு.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தேவதேவனின் பறவை

'பறவையின் இடம் விண்' என்றார் தேவதேவன்

விண்ணிலிருந்து மண்ணுக்கு வரும்போதெல்லாம்
பறவைகள் பறவைகளாகவே இருப்பதில்லை
பறக்கக்கூடிய நிலையொன்றைத் தவிர

மீண்டும் விண்ணிலேறும்போது அவை
பறவைகளாகி விடுகின்றன
மறுபடியும் மண்ணுக்குத் திரும்பும்வரை

பறக்கும்போது பறவைகள் அறியுமா
வேறெதையும்
விண்ணைத் தவிர

விண்ணின் ரகசியப் பொந்துகளையும் பாதைகளையும்
கண்டடையும் பறவைகள்
அழைத்துச் செல்லக் கூடுமோ அங்கு
பறவைகளல்லாத பிராணிகளையும்
என்னையும் உன்னையும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எப்போதும் கலவரம் நிறைந்த மண்ணில்
பாதுகாப்பின்மை
விரட்டிக் கொண்டும் எச்சரித்துக் கொண்டுமிருக்கின்றன
பறவைகளை
ஆனாலுமவை பூமிக்கு வந்தேயாக வேண்டியுள்ளது,
நமக்கிடையிலும்

மாபெரும் உணவுச்சாலையாகிய பூமியை
அவை ஒரு நாள் தூக்கிச் செல்லக் கூடும்
தம் அலகினால் கொத்தி

இனி விண்ணில் கூடுகட்டும்
இடத்தையும் நுட்பத்தையும் அவை தேரக் கூடும்

பறவைகள் மண்ணுக்கு
வராமலே போகின்ற நாளொன்று வருமா
வந்தால் அவற்றை எங்ஙனம் அழைப்பது
எப்படி அவற்றைக் காண்பது?



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## யாரோ

நீ வருகிறாய்
ஒளி மிகக் கொண்ட
புலரியில்
வேம்பின் நுனிகளிலும்
இனிமை துளிர்க்கிறது

மல்லிகை வாசம்
முன்னிரவை
இன்னும் தன்னுள் பொத்தி வைத்திருக்கிறது
ரகசியமாய்
உனக்கென

எங்கே உன் குளிர்ந்த கைகள்
ஒவ்வொரு ரேகையும்
பேராறாய்ப் பெருகியோடும் சத்தத்தை
அவற்றில் நான் கேட்டேன்

பழகிய முற்றத்தில்
தயக்கம் முன்னகர எதற்காக நிற்கிறாய்

சாளரங்களைத் திறந்து
உட்புக முடியா ஒளி
கதவில் படிகிறது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நீ நிற்கிறாய் இன்னும்
பகல் கனிகிறது
உன் காலடியில்

வா என்னிடத்தில்
பசுஞ் செடிகளில்
மிதக்கின்ற பாடலை அறிய

காற்றும் வண்ணத்துப் பூச்சிகளும்
சொன்ன ரகசியங்களை
சொல்லக் காத்திருக்கும் செடிகளை
உன்னிடத்தில் தருகிறேன்

இந்த மாலை தோட்டத்தில் வளரட்டும்
அப்போது
மல்லிகை வாசம் வீசும் பொன்னந்தியின் சிறகசைகிறது

அங்கே இருப்பது
யாருடைய நிழல்கள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இருள்

போ
துயரில் தோய்ந்து போ
இனி எந்தப் பின்னேரமுமில்லை
உன் முகத்தில்
பொன்னொளியைப் பூச

அலையடிக்கும் துறைமுகத்தில்
தவிக்கும் படகில்
ஒரு துண்டு ஆகாயம்
உன் தாயின் கண்ணீர்த் துளியுடன்
தத்தளிக்கிறது.

ஒருவர் பின்னொருவராய்
சாகக் காத்திருக்கிறோம்
பிணங்கள் விழ விழ
பிணங்களாயே விழ



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முடிவற்ற இரவுகளின்
துயர்க் கயிறு நீள்கிறது
நம் கால்களுக்கிடையில்
ஊரும் போர்ப் பாம்பு
ஒவ்வொரு தலையாய் வீழ்த்துகிறது

முடிவற்ற சவ ஊர்வலத்தில்
சிக்கியழிகிறது பொழுது

புனித நினைவாலயங்கள்
ஒவ்வொன்றாக வீழ்கின்றன

எங்களைக் கைவிட்ட கடவுளர்கள்
எங்களால் கைவிடப்பட்ட கடவுளர்கள்
எல்லாம் இங்கேதான்

இனி வரும் முடிவற்ற இரவு
நமது பிணங்களின் பரிசாக



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குறிப்புகளுக்காக....

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



அரசியற் தீர்க்கதரிசனங்கள், இராணுவ வெற்றிகளுக்கு அப்பால், போரினுள் அன்பையும் கருணையையும் வேண்டும் மனித இதயத்தின் குரலாக, விரட்டப்படும் சனங்களின் அவலத்தின் சிறு ஒலிப்பாக கருணாகரனின் கவிதைகள் உள்ளன. வன்னிக்கான தொடர்புகளை யுத்தம் முற்றாக அழிக்கு முன் கிடைக்கப் பெற்ற அவரது கவிதைகளது தொகுப்பு அவருடன் தொடர்புகள் ஏதுமற்ற இந்த யுத்த காலத்தினில் வெளிவருகிறது

ISBN 978-81-908405-2-1
90000 >
9 788190 840521

வடலி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org